# யாழ்நாதம்

இதழ் 21

2015



வெளியீடு

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்

கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வருடாந்தவிழா
ஒளிபெற மங்கள
விளக்கேற்றல்



பிரதம விருந்தினர்
கௌரவிப்பு




அரங்கு அழகுற...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் இங்கு வசிக்கிறேன். இவ்விடம் அழகாக இருக்கும்."

"It ought to be beautiful, I live here."

# யாழ்நாதம்

இதழ் 20-21 2015

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கல்லூரி கீதம் | 2 |
| 2. | மலர் ஆசிரியையின் மனதிலிருந்து ... | 3 |
| 3. | தலைவியின் வாழ்த்து | 5 |
| 4. | "பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலோ ரெம்பாவாய்" | 7 |
| 5. | கண்திறக்கும் கல்வி | 11 |
| 6. | ஔவைப்பாட்டியின் கதை | 15 |
| 7. | எடுத்துரைப்பு உத்தி ஒன்று | 23 |
| 8. | வீதி எல்லாம் வெண்மணலாய் விரிந்த சனக்கூட்டம்" | 30 |
| 9. | "எந்தாய்" | 33 |
| 10. | பொன் தகைய பெண், தன்னைப்பேணின் தாரகை | 35 |
| 11. | அன்னையின் மகத்துவம் | 39 |
| 12. | தெய்வத் தமிழிசையின் அன்னை | 42 |
| 13. | நற்சிந்தனைகள் | 45 |
| 14. | Sonnet on J/ H. L. C | 48 |
| 15. | ஒழுக்கம் | 49 |
| 16. | மனம் ஒரு குரங்கு ! | 50 |
| 16. | கௌரவமளிப்பு பாராட்டுரை ஏற்புரை | 52 |
| 17. | Jaffna Hindu Ladies College | 63 |
| 18. | Educating & Enriching the Young Mind | 64 |
| 19. | அறிக்கைகள் - படங்கள் | 66 |


வெளியீடு

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் – கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி கீதம்

திருமிகு மெங்கள் யாழ்நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடுங் கல்லூரி - எங்கள்
பெருவரு மிந்துப் பெண்களுக் கொளியாய்ப்
பிறங்கிடுங் கல்லூரி - உயர்
மருவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடுங் கல்லூரி - உனைப்
பெருகிடும் அன்பால் புந்தியில் வைத்துன்
புகழினை வாழ்த்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ

இந்து மதப் புகழ் எங்கும் விளங்கிட
இசைந்திடுங் கல்லூரி - இயல்
சிந்தை வளம்பெற மெய்ப் பொருளறிவைச்
சேர்த்திடுங் கல்லூரி - வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி அறிவைச்
சுரந்திடுங் கல்லூரி - உனை
வந்தனை செய்து பைந்தமிழ் மாலை
வாழ்த்தொடு சூடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

மங்கையர் மாண்பை மன்பதை அறிய
முழங்கிடுங் கல்லூரி - ஒளி
பொங்குயர் அறிவுச் சுடரினை யுளத்திற்
பொறித்திடுங் கல்லூரி - இந்து
நங்கையர் வாழ்வின் லட்சிய மனைத்தும்
நல்கிடுங் கல்லூரி - உனை
அங்கையில் மலர்கொண் டன்புடன் பாடி
அனுதினம் ஏத்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

கலைமகள் உலவக் களிநடம் புரியக்
கண்டிடுங் கல்லூரி - என்றும்
மலைமகள் கொழுநன் மலரடி போற்றி
மாண்புறுங் கல்லூரி - நித்தம்
நிலமகள் நெற்றித் திலகமென் றேத்த
நிலைத்திடுங் கல்லூரி - உனைத்
தலைமுறையாகத் தொழுதுளங் குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் ஆசிரியையின் மனதிலிருந்து ...

**யா**ழ் நாதம் - யாழ் நகரிலே இனிய தெய்வீக நாதத்தைக் கடந்த வருடங்களாக ஒலித்து, இசைத்து, வரும் யாழ் / இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் (கொழும்புக் கிளை) தமது அன்னையின் பாதக் கமலங்களுக்கு இரு கரம் நீட்டி, உளமார, மனமார மகிழ்வுடன் சமர்ப்பிக்கும் அர்ச்சனைப் பூ, இந்த யாழ் நாதம்.

யாழ் நாதம் – மாதங்களில் மார்கழியாய், மலர்களில் மல்லிகையாய், கலைகளில் ஓவியமாய், காற்றினிலே தென்றலாய் பசுமை நிறைந்த நினைவுகளை, சுகமாய்ச் சுமந்து வருகின்றது - பழைய மாணவிகளது கரங்களிலே பெருமையுடன் தவழ்ந்து மகிழ்கின்றது யாழ் நாதம். ஒரு பாடசாலையின் மாணவிகளை மானசீகமாக ஒன்றிணைக்கும் மலராய், தமது பால்ய பருவத்தை, பள்ளிக்கூட நினைவுகளை, சற்றே திரும்பிப் பார்க்க வைக்கும். நன் மலராய், வாசமிகு மலராய் திகழ்வது, யாழ் நாதம். இவ்வண்ணம் திரும்பிப் பார்க்கையில் எம் இனிய பாடசாலையின் ஆரம்பத்தைச் சற்று நோக்குவோம். கல்விப்பாரம்பரியம் மிக்க யாழ் / வண்ணார்பண்ணையில் கொடிகட்டிப் பறக்கும் சைவ ஆசாரம் மிக்க ஓர் ஆலயத்துக்கு இணையான யாழ்/இந்துக்கல்லூரியில் விதையிட்டு, யாழ், இந்துவின் விளையாட்டு மைதானத்தில் முளைவிட்டு, நல்ல மனம் கொண்ட திரு. பொன்னுச்சாமி அவர்களின் இல்லத்தில் துளிர் விட்டு, திரு. திருமதி சிவகுருநாதர் தம்பதியினர், இப்பாடசாலைக்கு நன்கொடையாக அளித்த பிறவுன் வீதியில் அமைந்த "நடுத்தோட்டம்" காணியில் இலைவிட்டு, கிளைவிட்டு, வளர்ந்து இன்று மலர் தந்து, காய் தந்து, கனி தந்து பெருநிழல் தந்து பெருவிருட்சமாக, நிழல் பரப்பி நிற்கின்றது. எமது பெருமதிப்பிற்குரிய யாழ்/இந்து மகளிர் கல்லூரி செல்வி காயத்திரி பொன்னுத்துரை, திருமதி சிற்றம்பலம், செல்வி சாந்தா, திருமதி கிளேறா மொட்வாணி, செல்வி அட்சயா, திருமதி சறோஜினி ராவ், திருமதி விமலா ஆறுமுகம், செல்வி பத்மா இராமநாதன், திருமதி. நாகராஜா, திருமதி சரஸ்வதி ஜெயராஜ், திருமதி வேதநாயகி பேரின்பநாதன், திருமதி நிமிலாதேவி விமலாநாதன் என புகழ் பூத்த, அறிவும் ஆற்றலும் மிக்க அதிபர்களின் தன்னலமற்ற பணியால் இன்று கம்பீரமாக, கண் திறக்கும் கல்வி தரும் கல்விக்கூடமாக மிளிர்ந்து நிற்கின்றது எமது அன்னையாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்/இந்து மகளிர் கல்லூரி. இதன் தனித்துவம், இஃது அமைந்திருப்பது அருள்மிகு இராஜவரோதயப் பிள்ளையார் ஆலயத்தின் திருவருட் பின்னணியிலேயேயாம். இந்த விக்னேஸ்வரனின் இன்னருளால் எந்தவித விக்கினமும், எமது பாடசாலையை அணுகமாட்டாது என்பது நம்பிக்கை.

இவ்வருடமும் இம்மலரை மலர வைக்கும் அரும்பணியை மனதார யான் ஏற்றுக் கொண்டேன். யாழ் இந்து மகளிரின் மூத்த குழந்தைச் செல்வங்கள் அல்லவா நாம்! இப்பணியில் ஆக்கமும் ஊக்கமும் எனக்கு அளித்த எமது பாடசாலை பழைய மாணவிகள் சகலருக்கும் எனது நன்றிகள். எமது சங்க உறுப்பினர்களது ஆக்கங்கள் மாத்திரமல்லாமல் மற்றும் எமது இதழின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு தங்கள் கருத்துக்களை எங்களுடன் தங்கள் கட்டுரைகள் மூலம் பகிர்ந்து கொண்ட கல்விமான்களது கட்டுரைகளும் இம்மலரில் இடம்பெற்றுள்ளமை பெருமைக்குரிய விடயமாகும். இவர்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றிகள்.

மேலும் தமது பங்களிப்புக்களை நல்கிய பழைய மாணவ சகோதரிகளுக்கும், என்னுடன் இணைந்து, முன் வந்து, மேற்படி ஆக்கங்களின் அச்சுப்பிரதிகளைச் சரி பார்க்க உதவிய அன்புச் சகோதரி திருமதி தயாநிதி செல்வநாயகம் அவர்களுக்கும், "யாழ்நாதம்" பிரதிநிதிகளை விற்பனை செய்வதில் ஆர்வமுடன் ஒத்துழைத்த திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம் அவர்களுக்கும் எமது சங்கத்தின், வளர்ச்சியின் ஒவ்வொரு அசைவிலும், தனது ஒத்துழைப்பை, அன்போடும் ஆற்றலோடும் நிதானத்தோடும் நேசத்தோடும் பாசத்தோடும் தந்துதவிக் கொண்டிருக்கும், இச்சங்கத்தின் தலைவி திருமதி. அபிராமி கைலாசபிள்ளை அவர்களுக்கும், எனது உளம் கனிந்த நன்றிகள்.

இம்மலர் மேன்மேலும் இனிய நாதமெழுப்பி, மணம் வீசி மிளிர எல்லாம் வல்லவனை வேண்டி நிற்கின்றேன்.

"It ought to be beautiful we live here"

**திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்த குரு**
மலர் ஆசிரியை,
பழைய மாணவிகள் சங்கம்,
கொழும்புக் கிளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவியின் வாழ்த்து

இவ்வாண்டு யாழ் நாதம் 20 - 21 இதழாக வெளிவருகின்றது. எமது சங்கத்தின் நிகழ்வுகளின் பதிவேடாகவும், பழைய மாணவிகளின் ஆக்கங்களை வெளிக்கொணரும் அறிவுக் களஞ்சியமாகவும் இச்சஞ்சிகை ஆண்டுக்கு ஒரு முறை தொடர்ந்து வெளி வருவது எமக்கு பெருமகிழ்ச்சியைத் தருகின்றது.

இச் சஞ்சிகை எமது கல்லூரியின் புகழ்பரப்பும் ஒரு ஆவணம் . நம்மொழி வளர, புதிது புதிதாக இளம் எழுத்தாளர்கள் தோன்றவேண்டும். அவர்களுடைய திறமைகளை வெளிப்படுத்த வேண்டும் என்பது எங்கள் அவாவாகும்.

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் கல்வி பயின்று பண்பான, கலாசாரம் பேணும் அறிவுடை மாதராகப் பலரும் திகழ்கின்றார்கள் என்று பெருமையுடன் கூறுகின்றோம். அந்தக் கல்லூரிக்கு எம்மாலான பணிபுரிய ஒவ்வொரு பழைய மாணவியும் முன்வரவேண்டும் என்பது என்னுடைய விருப்பம்.

எமக்கு எழுத்து அறிவு ஊட்டி, எமது வாழ்வுக்கு அடித்தளம் இட்டு எம்மை வளர்த்துவிட்ட, எமது கல்லூரித்தாய்க்கு நன்மை பயக்கும் ஆக்கபூர்வமான செயல்களில் முன்னின்று உழைத்த கொழும்புக் கிளை அங்கத்தவர்களுக்கு, இச்சஞ்சிகை வாயிலாக எம் உள்ளம் நிறைந்த பாராட்டுக்கள், நன்றிகள். உங்கள் பணி மேலும் சிறப்புற எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிப்பாராக.

**திருமதி. அ. கயிலாசபிள்ளை**

தலைவி,

யாழ் இந்து மகளிர் பாடசாலை,

பழைய மாணவிகள் சங்கம்

கொழும்புக் கிளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பங்கயப்பூம்புனல் பாய்ந்தாடேல் ஓர் எம்பாவாய்"

ஆக்கம் - வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்

**மா**ர்கழி சிறப்புடைய மாதம். செல்லுகின்ற நெறிக்கு கைவிளக்காய் ஒளிகாட்டும் மாதம். வடமொழியில் இம்மாதத்திற்கு "மார்க்க சீர்வு" என்று பெயர். உலக இன்பங்களாகிய திருமணம், வீடு குடிபுகுதல், புதுமனைக்கு அத்திவாரமிடல் போன்ற இலௌகீக காரியங்கள் இம்மாதத்தில் நடைபெறுவது இல்லை. உலகியல் இன்பங்களை ஒதுக்கிவிட்டு, இறையியலை சிந்திக்கச் செய்யும் மாதம். அதனால்தான் புருஷோத்மன் "மாதத்தில் நான் மார்கழியாக இருக்கின்றேன்" என்று அருளுகின்றான்.

கல்வியில் சிறந்தவன் சூரியன். சொல்லின் செல்வனாகிய அஞ்சனா புத்திரன், ஒன்பது வியாகரணங்களையும் கதிரவனிடமிருந்தே அறிந்து "நவ வியாகரண பண்டிதன்" என்று புகழ் பெற்றான். சுக்ல யஜுர் வேதத்தை யாக்ஞவல்கிய மகரிஷிக்கு அருளியவன் பகலவனே. அத்தகைய கல்வி வல்லான் கல்விக் கடலாகிய தேவகுரு வியாழ பகவானின் வீட்டில் (தனுர் இராசியில்) சஞ்சரிக்கும் மாதம் மார்கழி மாதம், தீட்சைக்கு உரிய மாதம். மார்கழி திருவெம்பாவைக் காலத்தில் பன்னிரு திருமுறைகளுக்கும் காப்பிட்டுவிட்டு திருவாசகத்தை மட்டுமே ஓதவேண்டும் என்று விதித்திருக்கும் நியதியைப் பார்க்குமிடத்து, மார்கழி மாதத்தின் புனிதத் தன்மையை உணர்கின்றோம்.

மற்றைய காலங்களைப் போலல்லாது மார்கழி வைகறைப் பொழுதில் ஆலயங்களில் பூசை வழிபாடு நடக்கின்றது. இது தேவர்களுக்குரிய அதிகாலைப்பொழுது. இந்தப் புலரிப் பொழுதில் நடக்கின்ற பூசைக்கு கோடி நாட்கள் நடக்கும் பூசையும் ஈடாகாது. இந்த வைகறை வழிபாட்டைச் செய்து சிவனை வழிபட்டவர்கள் இந்திரபோகம் எய்தப் பெற்று இந்திரனுடைய நாட்களில் கோடி நாட்கள் சிறப்புற்று வாழ்வார்கள். (ஒரு தேவ ஆண்டு 366 மனித ஆண்டுகளைக் கொண்டது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் பாண்டி நாடு தந்த இரு கொள்கை முத்துக்கள் திருவாதவூரிலே தோன்றிய மணிவாசகப் பெருந்தகையும், ஸ்ரீ வில்லிபுத்தூர் பெற்றெடுத்த பொற்கொடி ஆண்டாள் நாச்சியாரும் ஆவர்.

மார்கழித்திங்களில் சிவபெருமானுக்கு ஆதிரை விழா எடுத்தலும், அந்நாட்களில் உலகு செழிக்க அந்தணர் தீ வேட்டலும், இல்லறத்தவராகிய ஆடவரும் பெண்டிரும் தாம், தாம் விரும்பியவற்றைப் பெற ஆனந்தக் கூத்தனை வேண்டி நிற்பர்.

இம்மார்கழி நீராடலின் நோக்கம், நல்ல கணவரைப் பெற்று இல்வாழ்வு சிறக்கவும், நாடுமலிய மழை பெய்து நாடு சிறக்கவும் ஒவ்வொரு நாளும் வைகறையில் எழுந்து கூட்டமாகச் சென்று இறை புகழ் பாடி நீராடி நோன்பு செய்தலேயாகும்.

பரமாத்மாவாகிய இறைவனைத் தலைமகனாகப் பெற்று பேரின்ப வாழ்க்கையில் தலைப்படுவதற்கு விரும்பும் கன்னிப் பெண்ணாகத் தம்மைப் பாவித்து திருவாதவூரரும், பெரியாழ்வார் பெற்றெடுத்த பொற் கொடியும் பாலைப்பாடல்களைப் பாடுகின்றனர். ஆன்மநாயகனாகிய இறைவனை அடைவதற்கு உரிய பக்குவம் முதிர்ந்த உயிர்களைக் கன்னிப் பெண்களாகவும் ஆணவமல இருளில் பிணிப்புண்டிருத்தலை உறங்கிக் கிடத்தலாகவும், மலவாற்றல் ஒழியப் பெறும் நிலையைத் துயில் நீத்தலாகவும் மலபரிபாகம் அடையப்பெற்ற உயிர்கள் அந்நிலைக்குத் தகுதியுடைய ஆன்மாக்களை அன்புநெறிப்படுத்தி, இறையருளில் தோய்வித்தற்கு அழைத்தலையே நீராட அழைத்தலாகவும் அமைத்துக் கொண்டு இருவரும் பாடுகின்றனர்.

மனித நாகரிகத்தின் தோற்றுவாய் நீர்வளம் மிக்க ஆறுகளுக்கு அடுத்துள்ள ஊர்களே என்பது ஆராய்ச்சியாளர்களது முடிவு. நோன்பினை மேற்கொள்பவர் முதலிலே நீராடி உடற்றூய்மை பெற்ற பின்னரே வழிபாட்டில் ஈடுபடுவர்.

திருவெம்பாவை முதல் எட்டுப் பாடல்களில் பெண்கள் ஒருவரை யொருவர் துயில் எழுப்புகின்றனர். ஒன்பதாவது பாடல் விண்ணப்பப்பாடல். சிவனடியார்களே தங்கள் கணவராக வேண்டும் என்ற பிரார்த்தனை ஒலிக்கின்றது. பத்தாவது பாடல் நீராடப் போகும் கன்னியர் இறைவனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரத்துவ நிலையை அதிசய வினாவாக்கி விடை காண்கின்றார். பதினொன்று முதல் பதினைந்தாம் பாடல் முடிய தாமரைப் பொய்கையில் சிவசிந்தனை அறாமல் நீராடும் நங்கையர்களைக் காண்கின்றோம்.

குளத்தில் குளிக்கும் குமரிகளுக்கு கருங்குவளை மலரும் செங்கமல மலரும் மலராகத் தோன்றவில்லை. மாதொரு பாகனாகத் தோன்றுகிறது. என்னே! அவர்களது மனப்பக்குவம். பதின்மூன்றாம் பாடல் அருமையான கருத்துச் செறிவுள்ள பாடல்

*"பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்*
*அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்*
*தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்*
*எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த*
*பொங்குமடுவில் புகப் பாய்ந்து பாய்ந்து நம்*
*சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்*
*கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்*
*பங்கயப் பூம்புனல் பாய்ந் தாடேலோர் எம்பாவாய்"*

கருங்குவளை போன்ற கண்ணையும், செந்தாமரை போன்ற முகத்தையும், அழகிய வளையல்களையும் (குருகு) ரீங்காரம் செய்யும் வண்டுகள் நிறைந்த பூமாலையும் கொண்டபடியால், பொய்கை உமாதேவியாகத் தோன்றுகின்றது. அதே பொருட்கள் சிவனுக்கும் உரித்தாகின்றன.

கருங்குவளை போன்ற கண்டமும், செந்தாமரையையொத்த திருமேனியும், கொக்கிறகும் (குருகு), பின்னிக் கொண்டிருக்கும் பாம்புகளும், உள்ளதால் பொய்கை சிவபெருமானாகவும் தோற்றம் அளிக்கின்றது. மாதொரு பாகனாகத் தடாகம் காட்சி தருகின்றது.

இப்பாடலில் மேலும் ஒரு சிறப்பு தீக்ஷை வகைகளை உணர்த்தி இருப்பது. கருங்குவளை - கண், சக்ஷு தீக்ஷை; செங்கமலப் போது - திருக்கரம் - திருவடி - ஸ்பரிச சீக்ஷை; குருகினம் - பறவைகளின் ஒலி; வாசக தீக்ஷை;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“திருநோக்கால், பரிசத்தால், திகழும் வாக்கால் தம்மைச் சார்வாருடைய மலங்களைப் போக்குவதால் அருட் சக்தியோடு கூடிய இறைவன் மடுவுக்கு உவமையாயினான். இப்படி எண்ண எண்ண இனிமை தருகின்றது திருவெம்பாவை.

மார்கழி நீராடலால் வரும் பயன்கள் இரண்டு. ஒன்று நாடு மலிய மழை பொழிவது. இரண்டாவது கன்னியர்கள் சிவனடியார்களைக் கணவனாகப் பெறுவது. முதலாவது பொது. பின்னையது சிறப்பு. பதினேழாம் பாடல் - அன்னை கோதாட்ட ஐயன் அருளும் திறம் சுட்டப்படுகின்றது. பதினெட்டாம் பாடல் விண்ணும் மண்ணும் காண்பரிய விராட் சொரூபனைக் காட்டுகின்றது. பத்தொன்பதாம் பாடல் பிரார்த்தனைப் பாடல் இருபதாம் பாடல் அட்டமூர்த்தி உருவனான இறைவனுக்கு படைத்துக், காத்து, அழித்து, கரந்து அருள் செய்யும், ஐந்தொழில் வல்லோனுக்கு எண்முறை போற்றி கூறி நிறைவு செய்கின்றது.

வீணையினை மீட்ட என்றே அமைந்த கைகள்,
விளங்கு மலர் தொடுப்பதற்கே ஏற்ற கைகள்,
பூண் அனைத்தும் அணிவதற்கே உகந்த கைகள்,
பொன் மணியைத் தொடுவதற்குத் தகுந்த கைகள்
பேணும் மனை அலங்கரிக்க உற்ற கைகள்
பேசும் உயர் கவிதைகளின் பொருளாம் கைகள்
நீணிவத்தே கல் உடைத்தல் தகுமோ என்றே
நெஞ்சம் எல்லாம் நொந்து நின்றான் அத்தொழிலாளி

– பார்வதிநாதசிவம் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண் திறக்கும் கல்வி

கலாபூஷணம், திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு,
பழைய மாணவி, யாழ் / இந்துக்கல்லூரி
முன்னாள் அதிபர், யாழ் / நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்.

*"எண் என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண் என்ப வாழும் உயிர்க்கு"*

என்று கூறிப்போந்துள்ளார் வள்ளுவப் பெருந்தகை. எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும். "எழுத்தறியத் தீரும் இழி தகைமை". கல்வியே எமக்கு ஞானக் கண். ஊனக்கண் இழந்தபோதும் ஞானக்கண் உதவியுள்ளமை வரலாறு. எனவே கல்விகண் அனையது மாந்தர்க்கு என்பது யதார்த்தம்.

கல்வி அறிவு, ஞானம் பெற நாம் கற்றாக வேண்டும். கற்றுப் பெற்ற அறிவு மேலும் வளர, தொடர்ந்து நாம் கல்வி பயின்றாக வேண்டும். இதனையே வள்ளுவனார் பின்வருமாறு கூறியுள்ளார்.

*தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு*

கல்வியின் விசேஷம், சிறப்பு யாதெனின், ஒருவன், ஒரு பிறப்பில் கற்ற கல்வி, அவனுக்கு ஏழு பிறப்புக்களுக்கும் சென்று பயன் தருமாம். எனவே இதைவிடக் கல்வி எமக்கு வேறு என்ன செய்தாக வேண்டும்?

*ஒருமைக்கண்தான் கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து*
என்கின்றது வள்ளுவம்,

இனி யாம் வாழும் காலத்திற்கு வருவோம். நாம் வாழும் காலம் கலியுகம்; பாவங்கள் தாராளமாகவும், தர்மங்கள் குறைவாகவும் காணப்படுதல் இந்த யுகத்தின் இயல்பாகும். இதற்கு மேலாக, இது விஞ்ஞான யுகம், கணனி யுகம் எனவும் கூறிப் பெருமைப்படுகின்றோம் நாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், இந்த மாற்றங்கள் பற்றி ஆற அமர இருந்து சிந்தித்துப் பார்த்தால், வளர்ச்சி, நன்மைகளோடு, தாராளமாக, இவற்றால் குழப்பங்களும் ஏற்படத்தான் செய்வதை யாம் காண்கின்றோம். நவீன கண்டுபிடிப்புக்கள், சாதனைகளைக் காட்டுவதுடன் வேதனையையும் காட்டத்தான் செய்கின்றன.

இன்றைய கல்வி முறையை எடுத்துக்கொண்டால், அங்கே வேகம் உண்டு. விவேகம் உண்டு. ஆழம், புதுமை உண்டு. ஆனால் குழப்பமும் மிக உண்டு. மாணவர்களைக் கேட்டால் விடயங்கள் தமது கிரகிக்கும் சக்திக்கு மேலே போய்விட்டது என்கின்றார்கள். இது அவர்களது யதார்த்தமான பேச்சு. ஆசான்களைக் கேட்டால், உரிய காலப்பகுதியுள் பலருமே சொல்லியுள்ளார்கள். இது அவர்களது அனுபவ வார்த்தைகள். பாடத்திட்டம் அமைக்கும் கல்விப்பகுதியினரின் சிந்தனைக்குரிய விடயம் இது.

மேலும், எமது முன்னோர்களின் கல்வி முறையைச் சற்றுச் சிந்தித்துப்பார்ப்போம். அவர்கள் கற்றவை நீதி நூல்கள். நீதி நெறி அவர்களை நன்னெறிப்படுத்தியது. நல்வழி அவர்களுக்கு நல்ல வழி காட்டியது. வாக்குண்டாம், கொன்றைவேந்தன், ஆத்திசூடி, நான்மணிக்கடிகை, வெற்றிவேற்கை இவற்றைக் கற்றவர்கள் வாழ்வில் படிப்படியாக முன்னேறினார்கள். புரிந்துணர்வும் விளக்கமும் பெற்றார்கள்; அவர்களது மதி வளர்ந்தது. அவர்கள் மதிப்பைப் பெற்றார்கள்; பரமன் அடிகளைச் சிந்தித்தார்கள். வந்தித்தார்கள்; அவர்கள் மனதில் புத்தி தோன்றியது. பக்தி வளர்ந்தது. ஆன்மீகம் மிளிர்ந்தது; உண்மை ஒளிர்ந்தது. இதனால் இவர்களது லௌகீகமும் ஆத்மீகமும் இணைந்து வளர்ந்து நற்பயன் அளித்தன.

இவ்வண்ணம் பார்க்கும்போது இன்றைய சிறார்க்கு நாம் அளிக்கும் கல்வி முழுமையான பயன் தருவதாக இல்லை. இக்கல்வி முறை எமது அருமைக்கும் பெருமைக்குமுரிய முன்னைய பாரம்பரியக் கல்விமுறையிலிருந்து விலகிச் செல்கின்றது. இது நல்லதற்கல்ல. நீதி நூல்களும் நன்னெறிகளும் இன்றைய கல்வி முறையில், பாடத்திட்டத்தில் தலை காட்டுகின்றனவே ஒழிய, தலை தூக்குவதாக இல்லை. “அ” என்றால் “அம்மா” என்ற காலம் “அ” என்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பிள்" என்கின்றது. அரிச்சுவடி அரிவரி நூல். அந்தோ! பரிதாபம். இதனை யார்க்கெடுத்துரைப்பது?!. பச்சிளம் சிறார்கள், சொன்னதைச் சொல்லும் பச்சைக்கிளிகள்! என்ன செய்வார்கள்! இத்தகைய கல்வி எங்கே கண்களைத் திறக்க வைக்கப் போகின்றது?!

முற்காலத்தில், மாணவர்கள் தமது ஆசிரியர்களிடம் நீதி நூல்களைக் கற்று, அவற்றை மனனஞ் செய்து அதன்வழி நடந்து சீரிய வாழ்க்கை ஒன்றை வாழத் தலைப்பட்டனர். இதன் காரணமாக, இத்தகைய கல்வியால், அறிவு வளர்ந்தது, பணிவு பிறந்தது, குருபக்தி வளர்ந்தது. ஆத்மீகம் மிளிர்ந்தது. ஆபத்து மறைந்தது. இதுவே கல்வியின் உண்மையான பயன்கள்.

இத்தகைய நீதி நூல்களைக் கற்று, நீதி வாக்கியங்களை மனனஞ் செய்யவேண்டிய, பருவம் இளமைப்பருவம், மாணவப் பருவம். இவ்வறிவு வளர்ந்து, உரிய காலத்தில் நற்பயன்களை அளித்திடும் என்பது நிஜம்.

*"கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழார் எனின்"*

என்ற வள்ளுவர் வாக்கை, யாம் இங்கு தொடர்புபடுத்திப் பார்க்கலாம். எந்த ஒரு கல்வியும் ஆத்மீகநெறிக்கு வழிகாட்டியே ஆகவேண்டும். எமது முன்னோர் தாம் கற்ற நீதி நூல்கள், சமய சாஸ்திரங்களை தாமும் உணர்ந்து, தமது குழந்தைகட்கும் புரிய வைத்து அவர்களையும் நன்னெறியில் வாழ வழிவகுத்தனர். இதனால் அன்றைய இளைய சமுதாயத்தின் மத்தியில் நீதிநெறிகளும், ஆன்மீகமும் பின்னிப்பிணைந்து காணப்பட்டது.

ஆனால் இன்றைய கல்வி முறையில் பண்பாடும் ஆன்மீகமும் அருகிக் கொண்டு வருதல் கண்கூடு. காரணம், இன்று கல்வி என்பது பதவி தேடவும் பணம் சம்பாதிக்கவுமே என்ற மிகக்குறுகிய மனப்பாங்கு எம்மவரிடையே தோன்றியமையேயாகும். குறிப்பாக நீதி நூல்கள் இன்றைய இளம் சிறார்க்கு முறையாகக் கற்பிக்கப்படுவதில்லை. இவற்றையெல்லாம் வளர்ந்தபின் தாமாகவே அவர்கள் புரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வார்கள் என்றதோர் பொருத்தமற்ற அபிப்பிராயம், துரதிஷ்டவசமாக இன்று எம்மவர் மத்தியில் உலாவுகின்றது. இதனை என்னவென்று சொல்வது!!

கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரமா? நல்லவற்றை பசுமை நிறைந்த இளம் நெஞ்சங்களில் அல்லவா விதைத்தாக வேண்டும்!

என்றுமே, எங்குமே, சமய அறிவு, பொறுமை, நிதானம், புரிந்துணர்வு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, தர்ம சிந்தை, தரவல்லன, தருவன. எனவே இவை அன்றாடம் பாடசாலைக் கல்வியில் போதிய அளவு இடம்பெற்றால்தான், வளரும் சமுதாயம் உருப்படியாக வளர வாய்ப்புண்டு. இதுவே நல்லதோர் சமுதாயத்தை உருவாக்க நல்ல மார்க்கம், நல்லநேரமும் ஆகும்.

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" மாணவச் சிறார்களின் பெரும்பாலான பொன்னான நேரம் பள்ளிக்கூடங்களிலேதான் கழிகின்றது. எனவே மற்றைய துறைகளைச் சார்ந்த பாடங்களோடு, சமய, நல்லிலக்கிய பாடங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தால்தான் இன்றைய கல்வி கண் திறக்கும். கல்வியாக அமையும் என்பதில் ஐயம் சிறிதுமில்லை.

ஓங்கி அடிப்பது எளிது. ஆனால்,
அடிக்காமல் அடங்கி இருப்பது மிகமிகக் கடினமானது
ஈசனே! உன்னையே தஞ்சம் என்று கூறிவிட்டு
உன் செயலை எதிர்பார்த்துக் காத்திருப்பது
அதைவிடக் கடினமானது

– சுவாமி விவேகானந்தர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவைப்பாட்டியின் கதை

சைவப்புலவர் ச. செல்லத்துரை

**ஔ**வைப்பிராட்டி என்றும், தமிழ் மூதாட்டி என்றும், தமிழ்க்கிழவி என்றும், நல்லிசைப்புலமை மெல்லியலார் என்றும் பலவாறு அழைக்கப்படும் ஔவையாரை அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள். ஔவையார்,

*அறிவிற் பெரியவர், வயதில் முதிர்ந்தவர்*
*அன்பில் சிறந்தவர் பண்பில் உயர்ந்தவர்*
*பெண்பாற் புலவரில் பெருமைக்குரியவர்*
*எண்ணில்லா ஆண்டுகள் வாழ்ந்து சிறந்தவர்*

என்றெல்லாம் கேள்விப்படுகின்றோம். இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய சங்ககாலம் முதலாகப் பிற்காலம் வரை வாழ்ந்தவர்கள் என்று பேசப்படுகின்றார்.

ஔவையார் ஒருவர் அல்லர். பல பேர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். காலத்துக்குக் காலம் ஔவையார் எனும் பெயரில் பல பெண்பாற் புலவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்று அறிகின்றோம்.

ஆனால் அவர்களுடைய வரலாறுகள் ஒன்றுமே எம்மிடம் இல்லை. தமிழ் இனத்தின் சாபக்கேடு இது. அப்படியானால் ஔவையாரைப் பற்றி அறிய வழி என்ன? வழி உண்டு.

மூன்று வெவ்வேறு காலங்களில் மூன்று ஔவையார்கள் வாழ்ந்தார்கள் என்ற முடிவுக்கு வந்தார்கள் ஆய்வாளர்கள்.

முதல் ஔவையார் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சங்கப் புலவராகிய ஔவையார். இவருடைய பாடல்கள், புற நானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை எனும் நான்கு நூல்களில் 59 இடம் பெற்றுள்ளன.

இரண்டாம் ஔவையார் கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் கம்பர் காலத்தில் வாழ்ந்தவர். இவருடைய பாடல்கள் தனிப்பாடல் திரட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71 உள்ளன. அத்துடன் ஔவைக்குறள் எனும் தத்துவ நூலில் 310 குறட்பாக்கள் உள்ளன. அதனால் இவரைத் தத்துவப்புலவர் ஔவையார் எனலாம்.

மூன்றாவது ஔவையார் கி. பி 16ஆம் நூற்றாண்டில் அதிவீரராம பாண்டியர்காலத்தில் வாழ்ந்தவர். அற நூல்கள் ஆகிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன் மூதுரை, நல்வழி ஆகிய நூல்களைப் பாடியவர். இவற்றில் 273 பாடல்கள் உள. இவரை நீதி நூற்புலவர் ஔவையார் எனலாம்.

ஔவையாரின் உண்மையான வரலாறு தெரியாததனால் காலத்துக்குக் காலம் பல கற்பனைக் கதைகள் தோன்றின. அவருடைய வரலாறு இல்லாவிட்டாலும் அவர் பாடிய பாடல்களைக் கொண்டு அவருடைய வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்களை அறிய முடியும். அவை மிகச்சுவாரசியமானவை.

**பிறப்பைப்பற்றிய ஒரு கதை :**

தந்தை பெயர் பகவன்; தாய் பெயர் ஆதி; இருவரும் தமக்குப் பிறக்கும் குழந்தையைப் பிறந்த இடத்திலே விட்டுச் செல்வதாகிய ஒப்பந்தம் உடையவர்கள். ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஒப்பந்தப்படி குழந்தையை அவ்விடத்திலே விட்டுச் சென்றார்கள். தாய் பிரிய மனமின்றி அழுதாள். பிறக்கும்போதே ஞானத்துடன் பிறந்த குழந்தை அது. அதுதான் ஔவை. அது பாடியது. அப்பாடல் ஒரு வெண்பா.

*இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்றெழுதி*
*விட்ட சிவனும் செத்து விட்டானோ - முட்டமுட்டப்*
*பஞ்சமே யானாலும் பாரம் அவனுக் கன்னாய்*
*நெஞ்சமே அஞ்சாதே நீ.*

அன்னையே இப்படித்தான் நடக்கவேண்டும் என்று என் தலையில் எழுதிவைத்த சிவன் இறந்து விடவில்லை. என்னைக்காப்பாற்ற அவர் இருக்கிறார். "நீ அஞ்சாமற் போ என்றது" குழந்தை. அவர்கள் போய்விட்டார்கள்.

அநாதையாகக்கிடந்த குழந்தையைப் பாணன் ஒருவன் கண்டெடுத்து வளர்த்து வந்தான். பிறப்பிலேயே அறிவும் ஆற்றலும், கவிபாடும் திறமும் கொண்ட குழந்தைக்கு ஔவையெனப் பெயரிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணர் குலவழக்கப்படி, தேசாந்திரியாக வாழ்ந்த குழந்தை வளர்ந்து திருமணத்தையும் விரும்பாமல் இறைவனிடம் முதுமைக்கோலத்தை வேண்டிப் பெற்று, உலகிற்கு அறிவு புகட்டலையே இலட்சியமாகக் கொண்டது. இனி ஔவையின் வாழ்வில் நடந்த சில சம்பவங்களையும் அவர் பாடிய பாடல்கள் சிலவற்றையும் பார்ப்போம்.

**சங்கப்புலவர் ஔவையார் காலத்தில் நிகழ்ந்த செய்தி :**

ஔவையார் தன் பாட்டுத்திறத்தாலே சேரசோழபாண்டியர் எனும் மூவேந்தர்களையும் வள்ளல்களையும் மிகவும் கவர்ந்து அவர்களுடன் அன்பு பூண்டிருந்தார்.

ஒருநாள் சேர நாட்டைச் சேர்ந்த தகடூரை ஆண்ட வள்ளலாகிய அதிகமான் நெடுமான் அஞ்சியின் அரண்மனையில் இருக்கும்போது ஒரு முனிவர் வந்தார். கையில் ஒரு நெல்லிக்கனியுடன் வந்தார்.

*உண்டாரைக் காக்கின்ற நெல்லிக்கனியொன்று*
*கொண்டு வந்தேன் மன்னா, பெற்றிடுவாய்*
*உண்டுபல்லாண்டுகள் நல்லாட்சி செய்துநீ*
*என்றென்றும் இன்புற்று வாழ்ந்திடுவாய்*

என்று வாழ்த்திவிட்டு நெல்லிக்கனியைக் கொடுத்துச் சென்றார். முனிவர் போனதும் மன்னன் யோசித்தான். இதையுண்டு நான் பல்லாண்டு வாழ்வதிலும் பார்க்க, ஔவையார் உண்டால் பல்லாண்டு வாழ்ந்து தமிழுக்குப் பணிசெய்வாரே என நினைந்து அவரிடமே கொடுத்து மகிழ்ந்தான். நெல்லிக்கனியை உண்ட ஔவையார் பல்லாண்டு வாழ்ந்து தமிழ் வளர்க்கும் பேறு பெற்றார்.

அதியமானின் அரண்மனையில் பல ஆண்டுகள் இருந்தார். அந்த நாளில் காஞ்சியை ஆண்ட மன்னன் தொண்டைமான்; அதியமான் மீது போர் தொடுக்க வந்தபோது ஔவையார் தொண்டைமானுக்கு அறத்தை எடுத்துக்கூறித் தூது போய், போர் மூளாமல் தடுத்தார்.

பறம்பு நாட்டையாண்ட பாரிவள்ளல் மீது ஔவையாருக்கு அதிக அன்பு. பாரி, காட்டில் படரக் கொழுகொம்பு இன்றிக் கிடந்த முல்லைச் செடிக்குத் தன் தேரையே கொடுத்த வள்ளல். அவனுக்கு அங்கவை, சங்கவை என இரு பெண் பிள்ளைகள். பாரியில் பொறாமை கொண்ட மூவேந்தரும், பாரியை முற்றுகையிட்டு வஞ்சனையாற் கொன்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதையறிந்த ஔவை அங்கு வந்து அப்பெண்பிள்ளைகளின் நிலை கண்டு துன்புற்று அவர்கள் சொல்வது போல் பாடினார்.

*அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்*
*எந்தையும் உடையோம் எங்குன்றும் பிறர் கொளார்*
*இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலாவில்*
*வெந்நெறி முரசின் வேந்தர் எம்*
*குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே"*

ஔவையார் தானே இருவரையும் அழைத்துச் சென்று திருக்கோவலூர் மன்னன் தெய்வீகனுக்கு மணம் முடித்துக் கொடுத்தார். விருந்துக்கு மூவேந்தரையும் அழைத்து மகிழ்ந்தார்.

இனி இரண்டாவது ஔவையாராகிய கம்பர்காலத்து ஔவையாரின் சில செய்திகளைப் பார்ப்போம்.

அந்தக்காலத்தில் கம்பர் வாயால் பாடல் பெறுவது பெருமை எனக்கொள்ளப்பட்டது. சிலம்பி என்ற தாசி கம்பரிடம் போய்த் தன்னைப் பாடும்படி கேட்டார். அவர் ஆயிரம் பொன் கேட்டார். அவள் தன் பொருள் எல்லாவற்றையும் விற்று 500 பொன் சேர்த்தாள். அவர் அவளுடைய சுவரில் அரைப்பாடல் எழுதிவிட்டுப் போய்விட்டார்.

*தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே*
*மண்ணாவதும் சோழ மண்டலமே*

என்ற பாடல் வரிகளைப் பார்த்து இதில் தன் பேரும் இல்லை. ஒன்றும் இல்லை. எல்லாம் இழந்தேனே என்று வருந்தினாள். சாப்பாட்டுக்கும் வழியில்லாமல் தவிட்டுக் கூழ் சதுக்கிக் குடித்தாள். களைத்துப்போய் அவ்வழியால் வந்த ஔவையார் சிலம்பியிடம் வந்து பசி தாங்கமுடியாமல் அவள் ஊற்றிய கூழைக்குடித்து வீட்டுத் திண்ணையில் படுத்திருந்தார். பாட்டைப்பார்த்தார். கம்பன் செய்த வம்பைச் சிலம்பி சொல்லி அழுதாள். ஔவையார் மீதி இரண்டு அடிகளையும் எழுதிவிட்டார்.

*பெண்ணாவாள் அம்பர்ச்சிலம்பி அரவிந்தத்தாள்*
*அணியும் செம்பொற்சிலம்பே சிலம்பு*

கம்பன் 500 பொன்னுக்குப்பாட, ஔவை அரைவயிற்றுக் கூழுக்குப்பாடினார். சிலம்பியும் பொன்னுடையாள் ஆனாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பருக்கு ஔவையார்மேல் அளவிறந்த பொறாமையும் கோபமும் எப்படியாவது ஔவையை அவமதிக்க வேண்டுமென நினைத்தார். ஔவையாரை அடி என்று அழைக்க வேண்டுமென்று எண்ணி "ஒரு காலடி நாலிலைப் பந்தலடி" என்று விடுகதை போல் சொல்லி அதன் பொருளைக் கூறுமாறு கேட்டார். இவர் ஆரைக்கீரையைக் குறித்து 'அடி' என்றும் இழிவான சொல் காணப்படுவதற்கு விடையாக, தாம் 'அடா' என்று கேட்டு, அவர் செருக்கை அடக்கவேண்டும் என நினைத்தார்.

உடனே

*எட்டேகால் லட்சணமே எமனேறும் பரியே*
*மட்டில் பெரியம்மை வாகனமே - முட்டமேல்*
*கூரையில்லா வீடே, குலராமன் தூதுவனே*
*ஆரையடா சொன்னாய் அடா*

என்ற பாட்டால் பதிலளித்தார். கம்பர் அடி என்றார் ஔவையாரோ அவலட்சணமே, எருமை மாடே, கழுதையே, குட்டிச்சுவரே, குரங்கே, நீ சொல்வது ஆரையடா (கீரை) என்று பாட்டிலே பல முறை பழித்துக்காட்டிவிட்டார். கம்பர் அடங்கிப் போனார்.

ஒருநாள் ஔவையார் வழியில் போய்க்கொண்டிருந்தபோது புலவர்கள் பலர், ஏடும் எழுத்தாணியும் கொண்டு வாடிய முகத்துடன் வந்து கொண்டிருந்தார்கள். என்ன காரணம் எனக் கேட்டார் ஔவையார்.

புலவர்கள், "அம்மையே! அரசன் நாளை விடியுமுன் நாலுகோடி பாடல் எழுதி வருமாறு கட்டளையிட்டான். விடியுமுன் எப்படி நாலுகோடி பாடல் எழுத முடியுமென ஏங்குகின்றோம்" என்றனர்.

சோழமன்னன் புலவர்களின் புலமையை மதிப்பவன். இவர்கள் நினைப்பதைப் போலக் கட்டளையிட்டிருக்க மாட்டான் என நினைத்த ஔவையார், "நான் சொல்கிறேன் எழுதுங்கள்" என்று பாட்டைச் சொன்னார்.

**முதலாவது கோடி**

*மதியாதார் முற்றும் மதித்தொருகாற் சென்று*
*மிதியாமை கோடி பெறும்*

**இரண்டாவது கோடி**

*உண்ணீர் உண்ணீர் உபசரியார் தம்மனையில்*
*உண்ணாமை கோடி பெறும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூன்றாம் கோடி**

*கோடிகொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு*
*கூடுதல் கோடி பெறும்*

**நாலாவது கோடி**

*கோடானு கோடி கொடுப்பினும் தம்முடை நா*
*கோடாமை கோடி பெறும்*

புலவர்கள் எழுதிச் சென்ற பாட்டை வியந்து மன்னன் பொன் கொடுத்தான். புலவர்கள் மகிழ்ந்து போற்றினர்.

ஔவையாருக்கென வீடில்லை, ஊரில்லை. மக்களோடு மக்களாகத் தேசாந்திரியாகத் திரிந்து, மக்களை அறநெறிப்படுத்துதலையே இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தார்.

ஒருநாள் வழி நடந்த களை, நல்ல பசி, எதிர்ப்பட்ட வீட்டுக்குப் போனார். அழைத்தார். வீட்டுக்காரர் வந்தார். பசிக்கு ஏதாவது தருவாயா? என்று கேட்டார். அவர் ஔவையை இருக்கச் சொல்லிவிட்டு உள்ளே போனார். அவருடைய மனைவியோ உலோபி. எச்சிற்கையால் கூடக்காக்கை துரத்தமாட்டார். இவர் அவளைத் தயவு பண்ணி முகத்தைத் தடவிப் பேன், பார்த்து மகிழச் செய்துவிட்டு மெல்லமாக ஔவை வந்திருக்கும் செய்தியைச் சொன்னார். அவள் படமெடுத்த பாம்பு போலச் சீறிப்பாய்ந்து, பழைய சுளகினை எடுத்து அவரை ஓட ஓட அடித்து விரட்டினாள். இதனைப் பார்த்த ஔவை

*இருந்து முகந்திருத்தி ஈரோடு பேன்வாங்கி*
*விருந்து வந்ததென்று விளம்ப - வருந்திமிக*
*ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்*
*சாடினாள் ஓடோடத்தான்*

எனப் பாடிவிட்டு, வீட்டுக்காரனைப்பார்த்து இப்படிப்பட்ட கொடியவளோடு குடும்பம் நடத்துவதில் பார்க்கச் சந்நியாசியாகப் போகலாமே என

*பத்தாவுக் கேற்ற பதிவிரதை உண்டானால்*
*எத்தாலும் கூடி வாழலாம் - சற்றேனும்*
*ஏறுமாறாக இருப்பாளே யாமாயிற்*
*கூறாமற் சந்நியாசம் கொள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பாடினார். அவன் அப்போதே மனைவியைவிட்டுச் சந்நியாசியாகப் போய்விட்டான்.

ஒருநாள் வழிநடக்கையில் வழியில் ஒரு நாவல் மரத்தின் கீழ் போயிருந்தார். அந்தநாவலில், மாடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் ஏறி இருந்து நாவற் பழங்களைப் பறித்துத் தின்பதைக் கண்டார். தம்பி எனக்கும் சில பழம் போடு என்று கேட்டார். சிறுவன் "பாட்டி சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" என்று கேட்டான். "நாவற் பழத்திலும் சுட்ட பழமா?. சரி. சுட்ட பழம் போடு" என்றார். அவன் பழங்களைப் பறித்து மண்ணில் போட்டான். ஔவையார் அவற்றை எடுத்து மண்ணை ஊதி ஊதித் தின்றார். சிறுவன் "பாட்டி பழம் சுடுகிறதா" என்றான். ஔவையார் திகைத்துவிட்டார். இந்த ஔவையையே ஏமாற்றிவிட்டானே!.

*கருங்காலிக்கட்டைக்கு நாணாத கோடாலி*
*இருங்கதலித் தண்டுக்கு நாணும்*

என்பது சரியாகப் போச்சே என்று வெட்கித் தலைகுனிந்து "நீ யார்?" என்று கேட்டார்.

சிறுவன் முருகனாகக் காட்சியளித்து "ஔவையே! உனது தமிழ்ப்பாட்டைக் கேட்க ஆவல் கொண்டு வந்து இந்த விளையாட்டைச் செய்தேன். கொடியது எது? பாடு" என்றார், ஔவை.

*கொடியது கேட்கின் எரிதவழ் வேலோய்*
*கொடிது கொடிது வறுமை கொடிது*
எனத் தொடங்கி

*அதனினும் கொடிது அன்பிலாப் பெண்டிர்*
*அதனினும் கொடிது அவர்கையில் உண்பதுதானே*

எனப்பாடி முடித்தார். பாட்டுக்கு மகிழ்ந்த முருகன் இனியது எது எனக் கேட்டார்.

*இனிது இனிது ஏகாந்தம் இனிது ............*
*அதனினும் இனிது அறிவுளோரைக்*
*கனவிலும் நனவிலும் காண்பதுதானே*
பெரியது எதுவெனக் கேட்டார் முருகப்பெருமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பெரிது பெரிது புவனம் பெரிது* ......... எனத் தொடங்கி
*இறைவனோ தொண்டர் உள்ளத்தொடுக்கும்*
*தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே*" என்றார்.

அரியது எதுவெனக் கேட்டார்.

*அரிது அரிது மானிடர் ஆவது அரிது*
....................
*தானமும் தவமும் தான்பெறல் அரிது*
*தானமும் தவமும் தான் செய்வர் ஆயின்*
*வானவர் நாடு வழிதிறந்திடுமே*
எனப்பாடி முருகன் அருள்பெற்று மகிழ்ந்திருந்தார்.

ஔவையார் ஒருநாள் திருக்கோவலூர் விநாயகருக்கு

*சீதக்களபச் செந்தாமரைப்பூம்*
*பாதச்சிலம்பு பல இசைப்பாடல்*
*பொன்னரை நாணும் பூந்துகில் ஆடையும்*
*வன்ன மருங்கில் வளர்ந்தழகெறிப்ப...*

எனத் தொடங்கி விநாயகர் அகவல் பாடிப் பூசை செய்து கொண்டிருந்தார். அவர் மனத்தில் சுந்தரரும் சேரமானும் கயிலாயம் போகும் காட்சி தெரிந்தது. தானும் அவர்களுடன் செல்லவேண்டுமென ஆவல் கொண்டு, விரைவாகப் பூசையைச் செய்தார். விநாயகர் அவரை ஆறுதல்படுத்தி உன்னை நான் அவர்களுக்கு முன் கயிலை சேர்ப்பிப்பேன். ஆறுதலாகப் பூசையைச் செய் என்றார். பூசை முடிந்ததும் தன் துதிக்கையால் அவரைத் தூக்கி அவர்களுக்கு முன் கயிலாயத்தில் விட்டார். ஔவை அதற்கும் ஒரு பாட்டுப்பாடினார்.

*மதுரமொழி நல்லுமையாள் சிறுவன் மலரடியை*
*முதிர நினைய வல்லார்க் கரிதோ, முகில் போல்முழங்கி*
*அதிர வருகின்ற யானையுந்தேரும் அதன் பின்வரும்*
*குதிரையும் காதம் கிழவியும் காணும் குலமன்னனே!*

எனப் பாடிக் கயிலாயத்தில் இன்புற்றிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடுத்துரைப்பு உத்தி ஒன்று

க. இரகுபரன்,
சிரேஷ்ட விரிவுரையாளர், மொழித்துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

கருத்துக்கள் மொழி வழியாக வெளிப்படுத்தப்படுகின்றன. சாதாரண பொதுமக்களுக்கு இடையிலான உரையாடல் முதற்கொண்டு, உயர்தர இலக்கியம் வரையில் அவற்றின் நோக்கம், கருத்து வெளிப்பாடே. ஒருவர் வெளிப்படுத்தும் கருத்து. சென்றடைய வேண்டியவரிடத்து எவ்வளவு தாக்கத்தைச் செலுத்துகிறதோ, அந்த அளவுக்கு அந்தக் கருத்தைச் சொன்னவரிடம் மொழியாற்றல் இருக்கிறது என்று தீர்மானிக்கலாம். சொல்லாற்றல் அல்லது எழுத்தாற்றல் மிக்கவர்கள் தங்கள் எண்ணத்தை இலகுவாகச் சாதித்து விடுவார்கள். அதாவது, தங்கள் கூற முற்படும் கருத்தைக் கேட்பவன்/படிப்பவன் உடன்படும்படியாக அவர்கள் செய்துவிடுவார்கள்; உடன்படச் செய்ய முடியவில்லையாயினும் குறைந்தபட்சம் தாம் கூறுவதை விரும்பிக் கேட்கும்படி/ வாசிக்கும்படியாவது செய்துவிடுவார்கள்.

*கேட்டார் பிணிக்கும் தகையவாய்க், கேளாரும்*
*வேட்ப மொழிவதாம் சொல்.*

கூறவந்த விடயத்துக்கு ஏற்ற - மிகப் பொருத்தமான சொற்களைக் கையாள்வது, ஒழுங்குபட - தர்க்க ரீதியாகச் சொல்வது, விடயத்துக்கு ஏற்ற உணர்ச்சியோடு - பாவத்தோடு சொல்வதுடன் கேட்பவனுடைய நிலைக்கேற்ற - பேசும் விடயத்துக்கேற்ற, தொனியைக் கையாள்வது, பொருத்தமான அணிகளை - உத்திகளைக் கையாள்வது என்று பல்வேறு விடயங்களில் அந்த மொழியாற்றல் தங்கியுள்ளது.

இத்தகைய விடயங்களிற் காட்டப்படும் நுட்பத்தை, பொதுவாக எடுத்துரைப்பு உத்தி என்று குறிப்பிடலாம். பேசுபவன்/எழுதுபவன் எந்த அளவுக்குத் தற்புதுமையான எடுத்துரைப்பு உத்திகளைக் கையாள்கின்றானோ, அந்த அளவுக்கு அவன் ஆற்றல் உடையவனாகக் கருதப்படுவான். எடுத்துரைப்பு உத்தியிலே காட்டும் நுட்பம்தான் ஒருவனைப் பேச்சாளன் / எழுத்தாளன் ஆக்குகின்றது. அப்படியல்லாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயத்தை நேரடியாக - சுவை எதுவும் அற்றவகையிலே கூறுபவன் மொழியாற்றல் உள்ளவனாகக் கணிப்பிடப்படமாட்டான். ஒருவன் எதைக் கூறுகின்றான் என்பதைச் சுலபமாகக் கண்டுவிடலாம்; ஆனால், எப்படிக் கூறுகின்றான் என்பதைக் கண்டறிய, நுட்பமான கலையுணர்வு, இரசனையுணர்வு வேண்டும். நாம் பெரும்பாலும் படைப்பாளி எதைக் கூறுகிறான் என்ற அளவிலே நம் விமர்சனங்களை முடித்து விடுகிறோம். இலக்கிய விமர்சனத்தைப் பொறுத்தவரையில் எப்படிக் கூறுகின்றான் என்ற ஆராய்ச்சியும் இன்றியமையாதது. உண்மையில் படைப்பாளி எதை, எப்படிக் கூறுகிறான் என்று காணும்போதே படைப்பாளியின் ஆழ்ந்திருக்கும் கவிதையுளத்தைக் காண்பது பூரண சாத்தியமாகும்.

இலக்கியங்களிலே எண்ணற்ற எடுத்துரைப்பு உத்திகள் கையாளப் பட்டுள்ளன. ஒரே வகையானதாகக் கொள்ளப்படுகின்ற எடுத்துரைப்பு உத்திகளிலேகூட ஒவ்வொருவரும் தத்தம் தனித்துவங்களைக் காட்டுதல் சாத்தியமானதே. அத்தகையவர்கள் தற்புதுமைத்துவம் உடைய படைப்பாளிகளாக மிளிர்கிறார்கள். அவ்வகையில். எடுத்துரைப்பு உத்தியொன்றை வெவ்வேறு நபர்கள் எவ்வெவ்வாறு தற்புதுமையோடு கையாண்டார்கள் என்பதைக் காட்டுவதே இச்சிறு கட்டுரையின் நோக்கம். முதலில் (எளிமை கருதி) அறிவுபூர்வமான கட்டுரை ஒன்றிலே வருகின்ற ஒரு பகுதியை நோக்குவோம்.

“மனிதன் இதுவரை எத்தனையோ அரிய காரியங்களைச் செய்து முடித்திருக்கிறான். நீர்வளம், நிலவளம் மிகுந்த நாகரிகம் முதிர்ந்து மக்கள் இன்புற்று வாழ்ந்துவந்த அழகிய பெரிய நகரங்களையும், கணநேரத்தில் உயிரினமே வாழமுடியாத நாசபூமியாக அழிக்கக்கூடிய அணுகுண்டையும் ஆக்கியிருக்கின்றான். நாம் பிரயாணம் செய்வதற்குத்தக்க ரெயில், மோட்டார்க்கார் முதலிய தன்னியங்கி ஊர்திகளை அமைத்திருக்கின்றான். மணி ஒன்றுக்கு நூற்றுக்கணக்கான மைல் தூரம் வான்வழியாக நம்மைக் கொண்டு செல்லவல்ல ஆகாய விமானங்களைச் சிருஷ்டித்திருக்கிறான். எஞ்சினியரிங் துறையில் 'பனாமா' கால்வாய் முதலிய பிரமாண்டமான வேலைகளை இயற்றி முற்றுவித்திருக்கிறான். சில மணிக்கூறுகளில் ஆயிரக்கணக்கான புத்தகங்களை வெளியிட்டு, அறிவை உலகெங்கும் பரப்பிவரும் அச்சியந்திரங்களை கண்டுபிடித்துள்ளான். இவையெல்லாம் அற்புதமான செயல்களேயாகும். ஆனால், இவற்றுக்கெல்லாம் மேலான அற்புதத்தையும் அவன் (மனிதன்) கண்டுபிடித்துள்ளான். அது யாது என்றால் அவன் பேசக் கற்றுக் கொண்டதும், எழுதக் கற்றுக் கொண்டதும் தான்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது 'மொழியின் அற்புத இயல்பு' என்ற தலைப்பிலே எழுதப்பட்ட கட்டுரையின் தொடக்கப் பகுதி. இக்கட்டுரையினை எழுதியவர் தமிழ் ஆய்வுலகின் தலைசிறந்த ஆளுமைகளுள் ஒருவராகக் கருதப்படும் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை. அறிவுபூர்வமான உண்மைகளைக் கல்வியாளர்கள் மாத்திரமின்றி, சாதாரண வாசகனும் உளங்கொள்ளத்தக்க வகையிலே எழுதுவது, பெரும் ஆய்வாளரான வையாபுரிப்பிள்ளையின் தனிச்சிறப்பு.

இங்கு மேற்கோளாகத் தரப்பட்ட பகுதியிலே, மொழியின் அற்புத ஆற்றலும், அந்த அற்புத ஆற்றலை நாம் நினைத்துப் பார்ப்பதில்லை என்ற யதார்த்தமும் மிக அற்புதமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மொழியின் ஆற்றலை உணர்த்த முற்படும் ஆசிரியர் முதலில் தான் எடுத்துக்கொண்ட விடயத்தோடு நேரடித்தொடர்பு இல்லாத சில விடயங்கள் பற்றிப் பேசுகிறார். அதாவது மனித குல வரலாற்றில் மனிதனால் நிகழ்த்தப்பெற்ற பெருஞ்சாதனைகள் சிலவற்றைப் பட்டியற்படுத்துகிறார். அணுகுண்டையும், மின்சாரத்தையும் வானொலியையும் கண்டுபிடித்தமை, நவீன ஊர்திகளைக் கண்டு பிடித்தமை ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்தமை, வியத்தகு பொறியியல் நிர்மாணங்களை மேற்கொண்டமை, அச்சியந்திரங்களை உருவாக்கியமை என்பவை அவை. இவை யாவும் ஆசிரியர் வாழ்ந்த காலத்தில் பெருங்கண்டுபிடிப்புக்களாக அறிமுகமானவை. மேற்படி, கட்டுரை இன்றைய காலக்கட்டத்தில் எழுதப்பட்டிருப்பின் இப்பட்டியல் இன்னும்நீண்டிருக்கக்கூடும்; அதேவேளை இப்பட்டியலில் உள்ளவற்றில் சில விடுபட்டிருக்கவும் கூடும். ஏனெனில் இவற்றுள் சில இன்று எமக்குப் பெரிய விடயமாகப் புலனாவதில்லை. அந்த அளவுக்கு விஞ்ஞானத்துறை விரைந்து முன்னேறி வருகிறது. அது வேறு விடயம். இங்கு எமக்கு வேண்டியது, மேற்கண்டவாறு சாதனைகளைப் பட்டியற்படுத்துவதன் மூலம் ஆசிரியர் எதனைச் சாதிக்க முற்படுகிறார் என்பதை அறிவதே.

வையாபுரிப்பிள்ளை, மனித சாதனைகளை வெறுமனே பட்டியற் படுத்துவதோடு மாத்திரம் நின்றுவிடவில்லை. அச்சாதனைகளின் பெருமை புலப்படும்படியாக அவை ஒவ்வொன்றையும் நீண்டநீண்ட அடைமொழிகளால் சிலாகித்துப் பேசுகிறார். எடுத்துக்காட்டாக அணுகுண்டைக் கடைப்பிடித்தமை பற்றிக் கூறவந்த ஆசிரியர், அதனைச் சிலாகிக்குமாற்றினை நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நீர் வளம், நில வளம் மிகுந்த நாகரிகம் முதிர்ந்து மக்கள் இன்புற்று வாழ்ந்து வந்த அழகிய நகரங்களையும் கணநேரத்தில் உயிரினமே வாழமுடியாத நாசபூமியாக அழிக்கக்கூடிய அணுக்குண்டை இயற்றினான்.”

இந்த அடைமொழியின் தாற்பரியத்தை இனி நோக்குவோம்.

* நீர்வளம் நில வளம் மிகுந்தனவான ........
* மனிதன் காட்டுமிராண்டியாய் இருந்து, படிப்படியாக நாகரிக மனிதனாக எடுத்த கோடிக்கணக்கான கால ஓட்டத்தின் பின்னர் அந்த நீண்ட கால முயற்சியின் பெறுபேறான ........
* மக்களின் இன்ப வாழ்வுக்கு ஆதாரமான ........
* அழகு மிக்கனவான ........
* பெரியனவான ........
* இலட்சக்கணக்கான மக்களின் வாழ்விடமான

நகரங்களை,

* கணப்பொழுதிலே
* உயிரினமே வாழமுடியாத நாசபூமியாக ஆக்கவல்லது அணுகுண்டு.

அத்தகைய ஆற்றல் வாய்ந்த அணுகுண்டைக் கண்டுபிடித்த மனித ஆற்றல் அபாரமானது.

இவ்வாறாகப் பலவகையிலே, மனித ஆற்றலை உணர்த்துவனவான காரியங்களை அவ்வவற்றின் பெருமையை உணர்த்துவனவான அடைமொழிகளோடு தந்து, வியப்பினை ஏற்படுத்திவிட்டு,

“இவையெல்லாம் அற்புதமான செயல்களேயாகும். ஆனால், இவற்றுக்கெல்லாம் மேலான அற்புதத்தையும் அவன் (மனிதன்) இயற்றியிருக்கிறான். அது யாது என்றால் அவன் பேசக்கற்றுக் கொண்டதும் எழுதக் கற்றுக் கொண்டதும் தான்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையாபுரிப்பிள்ளை கையாண்ட அதே உத்தியை அவருக்குச் சிறிது முற்பட்ட காலத்தில் வாழ்ந்த பாரதியும் கையாண்டுள்ளான். வையாபுரிப்பிள்ளை மொழியின் அற்புத ஆற்றலை உணர்த்த முற்பட்டார்; பாரதி, இசையின் அற்புத ஆற்றலை உணர்த்த முற்பட்டான். அவர் கட்டுரையிலே கையாண்ட உத்தியைப் பாரதி கவிதையிலே கையாள்கிறார். ஆதலால் கவிதைக்குரிய நளினங்கள் எல்லாம் அதிலே கலந்துள்ளன. குயிற்பாட்டு என்ற பெயரிலான குறுங்காவிய வடிவிலான - பாரதியின் கவிதைப் படைப்பிலே வரும் ஒரு பாத்திரம் குயில். அதன் இசையிலே கட்டுண்டுபோன ஒரு பாத்திரக்குரலாக, பாரதி பாடுகிறான். உலகப் படைப்புக்கள் அத்தனையும் நான்முகனாற் படைக்கப்பட்டன என்ற இந்திய புராண மரபின் அடிப்படையில் நான்முகனை நோக்கி அவனுடைய படைப்புக்களின் பெருமையை எடுத்துரைக்கும் பாங்கில் இசையின் பெருமையை உணர்த்த முற்படும் அந்தக் கவிதைப்பகுதி வருமாறு:

*"......... நான்முகனே!*
*பண்டே உலகு படைத்தனை நீ என்கின்றார்.*
*நீரைப் படைத்து நிலத்தைத் திரட்டிவைத்தாய்;*
*நீரை, பழைய நெருப்பிற் குளிர்வித்தாய்;*
*காற்றை முன்னே ஊதினாய்; காணரிய வானவெளி*
*தோற்றுவித்தாய்; நின்தன் தொழில் வலிமை யாரறிவார்?*
*உள்ளந்தான் கவ்வ ஒரு சிறிதும் கூடாத*
*கொள்ளைப் பெரிய உருக்கொண்ட பல கோடி*
*வட்ட உருளைகள் போல் வானத்தில் அண்டங்கள்*
*எட்ட நிரப்பி, அவை எப்போதும் ஓட்டுகிறாய்!*
*எல்லாம் அசைவில் இருப்பதற்கே சக்திகளை*
*பொல்லாப் பிரமா, புகுத்திவிட்டாய் அம்மாவோ!*
*காலம் படைத்தாய்; கடப்பதிலாத் திக்கு அமைத்தாய்;*
*ஞாலம் பலவினிலும் நாள்தோறும் தாம் பிறந்து*
*தோன்றி மறையும் தொடர்பாய் பல ஆனந்தம்*
*சான்ற உயிர்கள் சமைத்துவிட்டாய், நான்முகனே!*
*சால மிகப் பெரிய சாதனைகாண் இவை எல்லாம்*
*தாலம் மிசை நின்றன் சமர்த்து உரைக்க வல்லார் யார்?*
*ஆனாலும் நின்றன் அதிசயங்கள் யாவிலுமே*
*நானாமுதம் படைத்த காட்சி மிக விந்தையடா!*
*காடு, நெடுவானம், கடல் எல்லாம் விந்தை எனில்*
*பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பூதங்கள் ஒத்து புதுமைதரல் விந்தை எனில்*
*நாதங்கள் சேரும் நயனத்தினுக்கு நேராமோ?*
*அசைதரும் கோடி அதிசயங்கள் கண்டதிலே*
*ஓசை தரும் இன்பம் உவமை இலா இன்பமன்றோ!"*

பஞ்சபூதம் முதலானவற்றின் தன்மைகளைப் பொருத்தமான வகையிலே விபரிக்கிறான் பாரதி. (உ+ம் : 'காணரிய வானவெளி', கடப்பதிலாத் திக்கு' என்னுந்தொடர்களில் உள்ள நுட்பங்களைக் காண்க.)

பால்வெளியிலே உள்ள அண்டகோளங்களின் தன்மையையும் தொகையையும் எண்ணி அதிசயிக்கிறான் பாரதி. 'காணரிய வானவெளி' யாகிய அந்தரத்தில், அவற்றை ஓயாது ஓடவும், ஒன்றில் ஒன்று மோதாது சுழலவும், சக்திகளைப் புகுத்தி, உயிர் வர்க்கங்களையும் படைத்துவிட்ட பிரமனின் ஆற்றல் நன்கு புலப்படும்படியான குறிப்பு மொழியிலே 'பொல்லாப் பிரமா!' என விளிக்கிறான். 'அம்மாவோ' என ஆச்சரியத் தொனி எழுப்புகிறான். இவ்வாறு பிரபஞ்சப் படைப்புப் பற்றிய விபரிப்பிலே, பல்வேறு வழிகளிலே அதிசய பாவத்தைக் கொண்டுவர முனைகிறான் பாரதி. அதிசயம் யாவிலும் மேம்பட்ட அதிசயமாக இசையைக் காட்டுவதற்கே இந்த முயற்சியிலே பாரதி ஈடுபடுகிறான்; அல்லாது பிரபஞ்சப் படைப்பைப் பற்றி வியப்புறுத்துவது அல்ல பாரதியின் நோக்கம்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அருளாளரான மாணிக்கவாசகரும் இதே பாங்கிலே இந்த உத்தியைக் கையாண்டிருக்கிறார். இறைவனின் பெருமையை உணர்த்துவதற்காகக் கையாண்டிருக்கிறார். "திருவண்டப் பகுதி" என்ற நெடும் பாடலை மாணிக்கவாசகர் இந்த எடுத்துரைப்பு உத்தியோடுதான் ஆரம்பிக்கிறார்.

மாணிக்கவாசகர் இறைவனின் பெருமையை உணர்த்துவதற்குக் கையாண்ட உத்தியை, இடைக்காலத்தில் வாழ்ந்த ஔவையார், இறை அடியார் பெருமையை எடுத்துரைப்பதற்காகத் தற்புதுமையோடு கையாள்கிறார். இங்கு நாம் அவதானித்தவர்கள் யாவரிடமும், பெரிய விடயம் ஒன்றையோ, பலவற்றையோ அடைமொழிகளாற் பெரிதுபடுத்திக் கூறிவிட்டு, பிறிதொன்றை இத்தகைய பெரியன யாவற்றையும் சிறியனவாக்கி விடுகின்ற தன்மையைக் கண்டோம். ஔவையாரோவெனின் பெரியது என ஒன்றைக் கூறிவிட்டு, அதைவிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொன்று பெரியது, அந்த இன்னொன்றை விட மற்றொன்று பெரியது என்று ஏறுவரிசையிலான ஒரு அடுக்கமைவு முறையிலே பெரியனயாவிலும் பெரியது என யாவராலும் ஒப்புக்கொள்ளப்படுகின்ற தெய்வத்தை நிலைநிறுத்திவிட்டு யாரும் எதிர்பாராத வகையிலே, இறையடியாரை இறைவனைவிடப் பெரியவராக நிறுவும் முறை தற்புதுமையானது. ஔவையாரின் இந்த எடுத்துரைப்புக்கு இந்தியப் புராணக்கதை மரபுகள் அடிப்படையாக அமைந்தன. குறித்த ஔவை பாடல் வருமாறு:

*"பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்*
*பெரிது பெரிது புவனம் பெரியது*
*புவனமோ நான்முகன் படைப்பு*
*நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்*
*கரிய மாலோ அலைகடல் துயின்றோன்*
*அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்*
*குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்*
*கலசமோ புவியிற் சிறுமண்*
*புவியோ அரவினுக்கு ஒருதலைப் பாரம்*
*அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்*
*உமையோ இறைவர் பாகத்து ஒடுக்கம்*
*இறைவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்*
*தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!"*

இவ்வாறு இலக்கிய உத்தியொன்று, நெடுங்காலமாகப் பல்வேறுபட்டவர்களால், அவரவர் தனித்துவம் மிளிரக் கையாளப்பட்டுள்ளமையைக் கண்டோம். ஆயின், இத்தகைய உத்தியொன்று இலக்கியங்களிற் பயின்று வருவதாக, தமிழ் அணியிலக்கண நூல் எதுவும் கூறியதாகத் தெரியவில்லை. ஆதலால் இந்த உத்திக்குப் பொருத்தமான பெயரொன்று சூட்டப்பட வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியெல்லாம் வெண்மணலாய் விரிந்த சனக்கூட்டம்

ஆதியிலா நல்லூரான் அருள்வடியும்முகம் காண
வீதியெல்லாம் வெண்மணலாய் விரிந்த சனக்கூட்டம்
ஓதி உளம்தானுருகி "ஓம் முருகா" எனத் தேரில்
வீதிவலம் வருகின்ற வேலவனே! வினைகடிவாய்!

நல்லூரான்என்கின்ற நாமம் அதைக்கேட்டதுமே
உள்ளுருகும் நெஞ்சம் "ஓம் முருகா" எனும் நாவும்
தெள்ளுதமிழ் கேட்டு உந்தன்தேரோடிவரும் காட்சி
அள்ளாதே நெஞ்சை! ஆர்தான் உருகாதார்?!

வீதியெல்லாம் உந்தன்கைவேல் காணஇட்டது போல்
சாதிமதம்பாராது சனமெல்லாம் திரண்டு வரும்
ஆதியிலே அசுரர்குலம் அழித்தமரர் இனம் காத்த
நீதியனே! நீ மீள தமிழரினம் காவாயோ!

அடியளந்து பெண்கள் எல்லாம் அசைந்து வரும் ஒருகாட்சி
பெடியளும் உன் பெயர் சொல்லி பிரதிட்டை செயும் காட்சி
கொடி அசையும் கோபுரத்தின் கோலத்திருக்காட்சி
விடியலிலே தேர்க்காட்சி விளம்பிடவும் கூடியதோ!

கோபுரத்தில் கொடிச்சேவல் கூவுகிறதோர் அழகு
தாவி எழும் கற்பூரத்தழல் ஒளிரும் ஓர் அழகு
தேர் அடியில் தேங்காய்கள் சிதறுகிறதோர் அழகு
ஓடிவரும் தேரின் மணி ஒலிக்கும் அழகென் என்பேன்!

காவடிகள் ஆயிரமாம்பக்தர் எடுத்தாடிவர
பாவடிகள் ஆயிரமாய் பாவணர்கள் பாடிவர
சேவடிகள் தொழுதேத்த தேவர்களும் ஓடிவர - உன்
பூவடிகள் பக்தர் தொழ புண்ணியனும் தேரில்வலம் வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடம்பிடிக்க வாய்த்தவர்கள் வானோர்க்கும் மேலாய்
இடம்பிடிப்பார் இதுதிண்ணம் ஏற்றமிகு நல்லூரில்
தடம்பதித்து, தரையில் விழும் தகுதிகிடைத்தாலோ
உடம்பெடுத்த பயன்கிடைக்கும் "ஓம் முருகா" என்பீரே.

ஆறுமுகமும் அன்பர்தம் வினைதீர்த்து
தேரிற் சிரிக்கும் திருக்கரத்தில் ஒளி வீசி
வாரிக்குடிக்கும் வடிவேலும் அஞ்சல்என
கூறித்துடிக்க குமரன் அருள் சுரக்கும்

பச்சை உடை சாத்திய நீ பைய அசைந்து வர
"அச்சா" எனச் சொல்லி அன்பர் எல்லாம் கண்வடிவார்
உச்சியிலே கைகோர்த்து "ஓம் முருகா" என்றொலித்து
இச்சை எலாம்தீர பேர் இன்ப நிலை அடைவார்.

கந்தா எனக் கதறி கண்ணீரோடொரு கூட்டம்
"இந்தா கடலை" என இரைதேடும் ஒரு கூட்டம்
முந்தானை கண்டின்பில் மூழ்கும் ஒரு கூட்டம்
வந்தாலும் கந்தா! உன்வடிவில் மயங்கார் யார்?

நக்கீரன் துயர்தீர்த்தாய், நாவலனைத் தொழவைத்தாய்
சொக்கர்க்கு "ஓம்" என்ற சுருதிப்பொருள் உரைத்தாய்
பக்கத்திருக்க இரு பாவையரும் நல்லூரில்
மக்கள் துயர்தீர்க்க மயிலேறி வாராயோ?

ஓடிவந்து ஒருகாலம் உன்னடியை தொழுவதற்காய்
தேடி வந்து தமிழரெல்லாம் தேரடியில் திரண்டார்
ஆடிவரும் தேரழகை அள்ளிப்பருகிட நாம்
வாடித்தவிக்கின்றோம் வழியில்லையே கண்திறவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலஸ்தானத்தில் முறுவலித்து வேல் சிரிக்கும்
நீளச்சுமந்து உன்னை நிற்கின்ற மயில் சிரிக்கும்
கோலம் பொலிய உனைக் கொள்கின்ற தேர் சிரிக்கும்
நாளும் உனை வணங்கும் நல்லோரின் மனம் சிலிர்க்கும்

புல்லுருகும் உந்தன் பொன் மயமாம் வேல் கண்டு
கல் உருகும் உந்தன் கனிவான முகம் கண்டு
உள்ளுருகி உந்தன் உள்ளத்தைக் கவி வெய்ய
சொல்லுருகும் நெஞ்சத்துச் சோர்வெல்லாம் தான் உருகும்

வன்னியிலே தமிழர்க்கு வழங்குமுகம் ஒன்று
வாடுகிற தமிழரினைக் காக்கும் முகம் ஒன்று
சென்னியிலே கைவைத்து சோர்ந்தழுது நிற்கும்
செம்மணியின் உறவினரைச் சேருமுகம் ஒன்று
அந்நியமாய் ஊர்விட்டு அன்றழுது நிற்கும்
அன்பர்களின் கவலைகளைத் தீர்க்கும் முகம் ஒன்று
மண் அதனைத் தமிழர்க்கு வழங்குமுகம் ஒன்று
மாறான நீசரினை மடிக்கும் முகம் ஒன்று

*நன்றி*
*- ஜெயராஜ்ஜியம் -*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தாய்

புஷ்பா செல்வநாயகம்,
பழைய மாணவியும் ஆசிரியையும்
யாழ்/இந்து மகளிர் கல்லூரி

நான், மலேசியாவிலிருந்து இலங்கை வந்து யாழ் இந்து மகளிர் கல்லூரியில் இணைந்த நாள் என்றும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய தினம் எனலாம். 1947ம் ஆண்டு ஆவணி மாதம் 10ம் திகதி அந்த அன்னையுடன் வந்து சேர்ந்தது முதல், கல்லூரி அன்னையை என்றும் நினைவு கூறுவதில் மனநிறைவு அடைகிறேன். 1949ம் ஆண்டு கல்லூரி இறுதி ஆண்டு அதாவது அன்று வழக்கில் இருந்த பத்தாவது வகுப்பில் தேர்வு எழுதிவிட்டு தேர்வு முடிவுகள் வெளியாகும் வரை என் அன்னையிடம் வந்துபோவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். அப்போது அதிபராக முடிவில் திருமதி மொட்வாணியும் அதன்பின் திருமதி சறோஜினி ராவ் என்பவரும் இருந்தனர். ஆசிரியைகளாக செல்விகள் ஐயர், சாந்தா, செரியன் ஆகிய இந்திய ஆசிரியைகளும் நம் நாட்டு அறிவுசார் ஆசிரியைகளும் பணிபுரிந்தனர். இவர்களது நெறியாள்கை, வழிகாட்டல் முதலியனவும் கற்பித்தலின் உயர்வு அர்ப்பணிப்பு போன்ற பல பண்புகள் போன்றனவும் கல்லூரியின் தரத்தை உயர்த்த நிலைக்கு ஏற்றியதால் என்போன்ற பலர் உச்சப்பலனைப் பெற்றனர். என் அன்னையின் அரவணைப்பில் யான் பெற்ற அனுபவங்கள் பற்பல. கல்வி மேம்பாடு, விவாதம் செய்யும் ஆற்றல் போன்றவற்றோடு கலைத்துறையிலும் சிறந்து விளங்கும் உந்துசக்தியாக என் அன்னை விளங்கினாள். எனக்கு கல்வி மட்டுமல்லாது விவாதம், நடிப்பு முதலியவற்றினையும் வளர்க்க அன்னை உதவினாள். கல்லூரியின் திறந்த வெளி அரங்கில் ஆங்கிலப் பாடலாசிரியரான ஷேக்ஸ்பியரின் "மக்பெத்" எனும் நாடகம் எங்கள் கல்லூரி இறுதி ஆண்டுப் பரீட்சைக்கு ஒரு பாட நூலாக அமைந்தது. அந்த நாடகத்தில் ஒரு அங்கத்தை ஆங்கிலத்தில் நடித்து மக்பெத் எனும் நாயகனாக நடிக்கும் பேறும் பெற்றேன். கல்லூரியின் நல்ல சூழலில் பழகியதால் சிறந்த சிநேகிதிகளையும் அங்கேயே ஏற்றுப்பழகி இன்றும் அவர்களில் சிலர் என்னுடைய பழைய சினேகிதிகளாக இத்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகளின் பின்பும் விளங்குவது கண்டு வியக்காதவர்கள் இல்லை. இங்கு கல்லூரியின் இறுதி ஆண்டுத் தேர்வில் தேறிய பின் மேற்படிப்புக்காக சென்னைக்குப் போய் மேரிராணி கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த வேளை, ஒரு நாள் என் முந்தைய அதிபரான திருமதி சறோஜினி ராவ் என்னைக் காண வந்த சம்பவம் என்றும் என்னால் மறக்கமுடியாதது என்றால் உண்மையில் என்மேல் அன்பு கூர்ந்து அவர் வந்து என்னைக் கண்டு ஒரு சில வார்த்தைகள் பேசி வாழ்த்தினார். அவரது காலத்தின் பின், திருமதி விமலா ஆறுமுகம் கல்லூரியின் அதிபராகப் பதவி ஏற்றுப் பின், பட்டப்படிப்பை நிறைவு செய்து, என் முதல் ஆசிரியைப்பணியை புகழ்பூத்த மானிப்பாய் இந்துக்கல்லூரியில் ஏற்ற ஆண்டு 1956. அங்கு ஒன்பது ஆண்டுகள் பணியில் இணைந்துபின் இடமாற்றம் பெற்று யான் கல்வி கற்ற என் பழைய கல்லூரியின் ஆசிரியையாகப் பதவி ஏற்ற 1965ம் ஆண்டு முதல் கல்லூரியின் பல துறைகளில், அர்ப்பணிப்புடன் பணிபுரிய அன்னை அருள்பாலித்தாள். பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்பும், என் அன்னையை மறவாது அங்கு நடைபெறும் வைபவங்களில் பங்குபற்றுவதில் யான் தவறுவதில்லை. இப்போது கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கத்தின் உப தலைவியாக, என் அன்னைக்கு இயன்ற வரை தொண்டு செய்வதில் மகிழ்ச்சியும் ஆத்ம திருப்தியும் காண்கின்றேன். என் இன்றைய நிலைக்கு, என்னை உயர்த்தி ஆளாக்கிய என் தாயை நினைவுகூரா நாளே இல்லை. என் இறுதி மூச்சு வரை எந்தாயை மறவாது அவர் பணிநின்று காலம் கழிக்கவே எண்ணுகிறேன்.

*வாழ்க எந்தாய்*
*வளர்க அவள் புகழ்*

பெண்ணே!

அன்று மலர்போல் மென்மையாய் வாழ்ந்து, குலம் விளங்க மணம் வீசி நின்ற நீ, இன்று, நவீனம் என்னும் போர்வையில் நாட்டியமாடி அரைகுறையாய் நிற்பது என்ன கொடுமை?!!

– நான் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் தகைய பெண், தன்னைப் பேணின் தாரகை

திருமதி பத்மா கஜேந்திரதாஸ்,
முன்னாள் அதிபர்,
கொ/ சைவமங்கையர் கழகம்

கண்கள் எனப் போற்றப்படும் பெண்கள், பாரினில் பலரும் போற்றிடும் வகையில் நட்சத்திரங்களாக, பிரகாசிக்கின்றனர். அதிலும் இந்து சார் பெண்கள், பூமகள் தோன்றிய காலத்தில் தெய்வப்பெண்கள் முதல் மானிடப் பெண்களாய் அவதரித்த அத்தனை பேரும் அந்தமில்லா ஜோதியாக ஒளிர்கின்றனர். இதற்கு மூல காரணம் என்ன? இந்து சமயம் தந்த ஆதி சிவன் உமையே. ஆம்! அர்த்த நாரீஸ்வரர் ஆண் பெண் சரி பாதியாக காட்சி தருகிறார்.

*"சக்தியின்றி சிவனில்லை*
*சிவனின்றி சக்தியில்லை"*

இந்த ஆன்மீகத் தத்துவத்தின் பிரகாரம் ஒவ்வொரு இந்துவும் நடப்பாராயின் எமக்கு எப்போதும் நிறைவே. மலர்களைப் போன்றவர் மங்கையர். மங்கையராய்ப் பிறந்திட மாதவம் செய்திடல் வேண்டும் என்று பாரதி பாடினார். சித்தர் சிலர் சொன்னார், "மண், பொன், பெண் ஆசை தவிர்" என்று. பெண் பொன்னைப் போன்றும், மண்ணைப் போன்றும் பொறுமையுடையவளாக இருக்கக் கடமைப்பட்டால் பெண் தெய்வம் எனத் தாங்கக்கடவர். பூப்போன்ற பூவையர், பாரதி கண்ட புதுமைப்பெண் போல வாழலாம். ஆணுக்கு நிகராக பதவி, பட்டம், புகழ், வீரசாதனை வாழ்க்கைத் தேர்ச்சி புரியலாம். ஆனால் அவள் ஆணாக முடியாது. ஆணுக்குள் பெண் அடக்கம். பெண்ணுக்கு ஆண் மதிப்புத் தரல் நன்றே. பாரதி சொன்னார் "உன் காலில் நீ நில்; ஆனால் அதில் ஒரு வரம்பு ஒன்று வரைந்திடு" என நாம் சொல்வோம். பெண் அரைக்காற்சட்டை, மேல் உள்ளங்கி சார்ந்த மேற்சட்டை, அரைப்பாவாடை, இல்லை! இல்லை! கால் பாவாடை, அல்லது காற்சட்டை அணிந்தால் மட்டும் ஆணுக்கு நிகராகலாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அழகிய திருமகள் இவள்" என விளிக்கப்பட வேண்டியவள். இவளது நடை, உடை, பாவனைகள் எங்கே? பிழை இன்று 80% மேல் கல்வியறிவு உள்ளவர்களாக பெண்களின் நிலை உள்ளது. பெண்களுக்காக தனித்துவ இந்து மகளிர் கல்லூரிகள் நாட்டில் பலவுள. அன்றைய பெண்மணிகள் சைவப்பாரம்பரியம், கலைகலாச்சாரம் பேணவே இவற்றை ஸ்தாபித்தனர். அன்று ஆங்கில மோகம் வீசினாலும், மதம் மாற்றம் இருந்தாலும், கலாச்சாரம் மாறினும் நீ ஒரு இந்துவாக இரு என்று, மாண்பு மிகு பெண்ணாக வாழ வழி சமைத்தனர். ஒரு இந்து திருமணத்திற்கு இன்று பெண்கள் பாகிஸ்தானிய உடை என மதிப்பிடக்கூடிய சுரிதா, சல்வார் ஆகிய ஆடையணியில் வருகிறார்கள். காஞ்சிப்பட்டுடுத்தி, கஸ்தூரி பொட்டிட்டு, பூச்சூடிக் கூந்தல் முடித்து தேவதை போல் வந்த அந்தப் பெண், இன்று எங்கே ஒளித்தாள்? இக்கூற்று எல்லோரையும் குறிக்கவில்லை. மணமகளுக்குத் தாலி ஏற மங்கல விளக்கு ஏந்தும் பெண்ணாயினும் சரி, பெண் தோழியாயினும் சரி, விரித்த சடையினளாய், கையிழந்த சட்டையுடையவளாய், மணப்பந்தலில் காட்சி தருவது, ஏனோ'?

இன்று எங்கள் இந்து கலாச்சாரம் கலைந்து விட்டது அல்லது கலைக்கப்பட்டு விட்டது. "உண்ண வாருங்கள், கையலம்புங்கள், பானம் பருகினீர்களா, இன்னும் தரவா? என்ற கேள்விகள் மறைந்து, நீயாக எடுத்துக்குடி, நீயாக எடுத்துப் பரிமாறு" (Self Serving) என மாறிவிட்டது.

பாதையில் பாவையர் போனால் நான்கு பேர் பார்த்து "எவ்வளவு அடக்கம், என்ன அழகு கச்சிதமான அணிநடை" என்று சொல்ல வைக்கும் காலம் குறைந்துவிட்டது. எமது கலாச்சார உடை காற்றோடு போய்க் கொண்டிருக்கிறது. இதற்குப் பெண்கள்தான் காரணமா? பார்க்க வைக்கும் சமூகம் காரணமா? வெளிநாட்டவராக வரும் எமது இந்து மக்கள் பரப்பும் பண்பாடுதான் காரணம். பார்த்த நம்மவரும் அவர் உடை பாவனைகளைப் பின்பற்றுகிறார்கள். இந்த ஆடை அலங்காரமும் மிதமிஞ்சிய அழகுக்கலையும் சில ஆராய்ச்சிகள் கண்ட முடிவில், பெண்கள் தமது கவர்ச்சி உடை, கால நேர போக்குவரத்து, முற்போக்கு, வாய்த்துடிப்பு, காதல் மோகம் இவற்றால் வாழ்க்கைச் சீர்கேடுகளுக்கு ஆளாகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு பெண்கள் கடைப்பிடித்து, அனுபவக்கல்வி, வாழ்க்கைக் கல்வி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வாதாரக்கல்வி இவற்றைக் கடைப்பிடித்தால், 'கற்பு' எனும் பொன், பெண்ணாகப் பேணி, தாரகை ஆக முடியும் என்பது உறுதி. 'காதல்' என்பது புனிதமானது. ஆண் பெண்ணையும், பெண் ஆணையும் சரியாகப் புரிந்து, ஆழம் கண்டு, காதல் கொண்டு வெற்றி காணலாம். சில பிரிவினைக் காதலாக மாறி, உயிருக்கு உலை வைக்கிறது. உயிரை விட உனக்கு உரிமை இல்லை. கடவுள்தான் தீர்வு.

*குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்*
*மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து*
*நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால்*
*கல்வியழகே அழகு.*

தன்னைத் தெய்வமாக்க, வல்ல ஒழுக்கக் கல்வி கற்று, இளமையில் மேன்மை பெறவேண்டும். இதற்கு எமது சமயக்கல்வி உற்ற துணையாக நிற்கும் என்பது உண்மை.

"மாதா, பிதா, குரு, தெய்வம்." மாதா எனும் மங்கை தன்னைப் பக்குவப்படுத்தி, தன் மக்களை நல்வழிப்படுத்தல் கடமை. இவள் தன் உடை, நடை, பாவனைகள் பண்புள்ளதாக பக்குவப்படுத்தல் வேண்டும். இன்றைய அன்னையர், எல்லோரும் அல்ல, சிலர் தொலைக்காட்சி, திரைப்படம் அளவளாவுதல் எனப் பொழுதைப் போக்குகிறார்கள். நமது வருங்காலப் பிள்ளைகள் எப்படி பிரகாசிக்க முடியும்? தம் பிள்ளைகள் இஷ்டப்படி போவது, வருவது, வெளியில் நவீன (துரித) உணவு உண்ணல் என்பவற்றில் பெற்றார் அக்கறை காட்டாது விடல், அவர்கள் மீது அளப்பரிய நம்பிக்கை, அளவு கடந்த சுதந்திரமளித்தல் நம் வருங்கால இளைஞர்களின் சுபீட்சத்திற்கு தடைகளாகும். அந்நாளில் ஒரு பெண் நம்பிக்கையாக வெளியில் தனியாகப் போய் வருவாள். பெற்றாருக்கு அடக்கம், பிள்ளை மீது அவர்களுக்கு நம்பிக்கை. ஆனால் இன்று கலை, கலாச்சாரம் கலைந்த காலம் துரித உணவு, நவீன மாற்றத்தாக்கம், பலவீனம், பணவலை, வீச்சு நடமாடுகின்ற காலமாக அமைந்துள்ளது.

இதனால் பிள்ளைகளின் ஆளுமை, தன்னம்பிக்கை, நற்றிறன்கள், விழுமியங்கள் மழுங்கடிக்கப்படுகின்றன என்பதை உணர முடிகிறது. திருமண முறிவுகள், சிறுமி, பருவ மங்கை கற்பழிப்பு, கணவன் மனைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறக்கணிப்பு, சடங்கு, சம்பிரதாயம் தேவையானவை புறக்கணிப்பு, நம் இந்துப் பண்பாட்டையும் சமூகத்தையும் சீர்குலைக்கிறது.

*நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்*
*நல்ல மனைவி நல்ல குழந்தை தெய்வீகம்*

ஒரு பெண்மணியில்தான் குடும்பத்தின் அடிநாதம், அத்திவாரம், தங்கியுள்ளது. குடும்பம் சிரித்தால், உலகம் சிரிக்கும். இல்லையேல் அழும்.

சங்ககாலத்தில் பிசிராந்தையாரின் நரை, திரை மூப்பின்மைக்கு காரணம் கேட்டால் அதற்கு தன் நல்ல மனைவி, மக்கள் அறிவு காரணம் ஒன்று என்றார். அக்கால நாயன்மாருள் குலச்சிறை நாயனார், திருநீலகண்டர், குங்குலியக்கலய நாயனார் மனைவியார், திலகவதியார் ஆன்மீக வழி நின்று குலப்பெருமை காத்தனர். பெண்கள் நிகரான கல்வி பெற்றாலும் தகுதி, திறன் அறிந்து தன் சமய குலம் பேணல் அவசியம்.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள? பெண்கள் பெருமையுடன் வாழ்ந்தால் தெய்வத்துள் வைக்கப்படும். எழுத்தறிவு இல்லாவிட்டாலும் ஆன்மீக ஞானம், தேவாரப் பாராயணம், திருமுறைகள் கேட்டல், கற்றல் புராண அறிவு பெறல் மங்கையர்க்கு அவசியம்.

*"ஞான நல்லறம் வீர சுதந்திரம் பேணுநற்குடிப்*
*பெண்களின் குணங்களாம்"* - பாரதியார்

இந்நாளில் அறப்பணிபுரிந்த அன்னை திரேசா, தங்கம்மா அப்பாக்குட்டி, பெண்ணிற்கு பெருமை சேர்த்த பெரியோர் ஆவர். சித்தத்தை சிவன்பாலிட்டு நன்னூல்கள், பக்தி நூல்கள், கடவுள் சிந்தனை, பக்திப்பாடல், பிரசங்கம், கேட்டல் ஆகியவற்றில் அன்னையர் கவனம் செலுத்தவேண்டும்.

எனவே இந்துப் பெண்கள், எமது சமயம் கூறும் உண்மைகளை, நடையுடை பாவனைகளை சற்று நிதானமாகச் சிந்தித்து, அவற்றின் உண்மைகளை உணர்ந்து செயற்பட முன் வர வேண்டும். அப்படி வரின் உங்களுக்கு ஈசன் இன்னருள் நிச்சயம் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் மகத்துவம்

திருமதி தயாநிதி செல்வநாயகம் (B. A (Cey)
பழைய மாணவி,
யாழ்/ இந்து மகளிர் கல்லூரி

அன்னையின் அன்புதான் ஒரு குடும்பத்தின் கலங்கரை விளக்கு - அன்னையின் பாசம் மேன்மையானது. எதிர்பார்ப்பு ஒன்றும் இல்லாதது. சமுத்திரம் போன்று ஆழமானது. முடிவு இல்லாதது. இந்து சமயத்தவர்கள் தாய்மையை "சக்தி" என்றும் அழைப்பர். ஆலயங்களுக்குச் சென்று தெய்வத்தின் அருளைப் பெறுவதுபோல எமது அன்னையருக்கு பயபக்தியுடன் அன்பைச் செலுத்தினால், பல புண்ணியத்தைப் பெறமுடியும் என்பது ஒரு ஐதீகம்.

ஒரு குழந்தை தனது தாயின் வயிற்றில் கருவாக இருக்கும்பொழுது ஒரே உயிராகத்தான் செயல்படுகின்றது. அக்குழந்தை இவ்வுலகில் பிறந்தவுடன் முற்றுமுழுதாக தனது வளர்ச்சிக்கு தாயையே நம்பியுள்ளது. தாய் ஊட்டும் பால் அவளின் அரவணைப்பு, கண் இமைக்காது விழித்திருந்து கவனித்து பராமரிக்கும் முறையைப் பொறுத்தே அக்குழந்தையின் வளர்ச்சியும் அதன் எதிர்காலமும் தங்கியுள்ளது. ஒரு மரத்தின் கன்று நேராக ஸ்திரமாக வளருவதற்கு ஆரம்பத்திலேயே விதையை முறையாக விதைக்க வேண்டும். அது வளைவுடன் மரமாக வளர்த்துவிட்டால், அதனை மீண்டும் நேராக, உயரமாக வளர வைப்பது முடியாத காரியமாகும். அதே போன்று ஒரு தாயும் தனது குழந்தையை சிறு பராயத்திலிருந்தே, நேர் வழியில் நற்பண்புகளுடன் வளருவதற்கு உறுதுணையாக இருந்து வழி காட்டுதல் மிகவும் இன்றியமையாததாகும். ஒரு தாயானவள் எல்லாச் சமயத்தவர்களாலும் ஒரு உன்னத இடத்தில் வைத்துப் பேணப்படுகின்றாள். அன்னை பாசம், பொறுமை, சகிப்புத்தன்மை, தியாகம் யாவும் ஒருங்கே இணைந்த ஒரு பெண்ணாக மாறுகிறாள். தனது உயிரையே தனது குழந்தைமீது வைத்திருக்கிறாள். அதனை யாராலும் பறித்தெடுக்கவோ, இல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவோ முடியாது! ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல் அக்குழந்தையின் சுகதுக்கங்களில் பங்குபெறுகிறாள். அன்னையானவள் அக்குழந்தைக்கு எப்படி வாழ வேண்டும், எது முறையான சிந்தனைகள் செயற்பாடுகள், இன்னும் பல நற்சிந்தனைகளையும், சிறு பிராயத்திலேயே எடுத்துக்கூறுகிறாள். தன்னைத்தானே நம்பி வாழ்தல், மனவுறுதி, பிறரை முற்று முழுதாக நம்பி ஏமாற்றம் அடையாமல் இருத்தல், எது சரி, எது பிழை என்று முடிவெடுக்கும் தகைமை போன்ற நற்பண்புகளை தனது மக்கட்செல்வங்களுக்கு எடுத்துக்கூறுகின்றாள்.

ஒரு தாயின் மலர்ந்த முகம், புன்னகை மனதை நெகிழ வைக்கும் நற்செய்கைகள், இவை போன்ற நற்பண்புகளை உணர வைக்கின்றன. தாயன்பை எடுத்துக்கூறுவதற்கு வார்த்தைகளே இல்லை. ஒவ்வொரு குழந்தை உருவானதும், அது அடையும் தாயின் அரவணைப்பையும், ஸ்பரிசத்தையும் எடுத்துக் கூறுவதற்கு வார்த்தைகளே இல்லை.

சுவாமி விவேகானந்தா அவர்கள், ஒரு முறை அமெரிக்கா சென்றபொழுது அங்குள்ள இந்திய சமூகத்தினரின் மத்தியில் உரையாற்றினார். அங்கு குழுமியிருந்த மக்களுக்கு சில கருத்துக்களை எடுத்துக் கூறினார். "தங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதற்கு, பெற்றோர் தங்கள் சுகதுக்கங்களை அர்ப்பணிக்கின்றனர். எங்கள் நாட்டில் ஒவ்வொரு பெண்ணையும் அவள் சிறியவளாக இருந்தாலும் சரி "அம்மா - தாயே" என்றுதான் அழைப்போம். அதேபோல் அங்கும் நான் "Yes - Mother" என்று கூறினேன். அங்கு குழுமியிருந்த பெண்களிடையே சலசலப்புக் காணப்பட்டது. அங்குள்ளவர்கள் "அம்மா", "Mother" என்ற வார்த்தை வயது முதிர்ந்த பெண்களைத்தான் குறிப்பதாகும் என்பதை புரிந்து கொண்டேன். அவர்களுடைய விளக்கங்கள் எதுவாக இருந்தாலும் நாங்கள் அன்னையருக்கு அதி உயர்ந்த ஸ்தானத்தைக் கொடுக்கின்றோம். ஏனெனில் அவள்தான் தந்தைக்கும் பிள்ளைக்கும் இடையில் பிணக்குகள் ஏற்படும் பொழுது உடனடியாகத் தீர்த்து வைக்கின்றாள். ஒரு தாய் தன் பிள்ளை செய்யும் தவறை மன்னித்து மறந்து விடுகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய சமுதாயத்தில் வயோதிபப் பெற்றோருக்கு ஒரு ஏக்கம் தோன்றியுள்ளது. எமது பிள்ளைகள் எங்கள் மீது அன்பு செலுத்துவார்களா? எங்களைப் பரிவு; பாசத்தோடு முகம் கோணாமல் கவனிப்பார்களா? அல்லது முதியோர் இல்லத்தில் (Elders' Home) சேர்த்து விடுவார்களா? என, பல குழப்பங்கள் மனதில் உருவாகின்றது. எங்கள் நாட்டிலும் இந்தப்பிரச்சினை தலைதூக்கியுள்ளது. எங்களுடைய சமுதாயம் பந்த பாசங்களினால் பிணைக்கப்பட்டுள்ளது. இன்று இப்படியாக ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருப்பது மிகவும் பரிதாபகரமாகவுள்ளது.

எமது சமுதாயத்தில் பெரும்பாலான பெண்கள் கல்வியில் பல பட்டங்களைப் பெற்று, சமூகத்தில் கௌரவமான அந்தஸ்தில் இருக்கின்றனர். இதனால் குடும்பத்தில் பல விபரீதமான விளைவுகள் ஏற்படுவதை பத்திரிகை வாயிலாக நாள்தோறும் அறிகின்றோம். மனிதநேயம், அருகிப்போகும் தறுவாயில் உள்ளது. குடும்பங்களில் அன்பு, பாசம், ஒற்றுமை படிப்படியாக குறைந்துகொண்டே வருகின்றது. ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள மகனோ/மகளோ இந்த உண்மையை உணர்ந்து, புரிந்துணர்வு, விட்டுக்கொடுத்தல், தவறுகள் செய்தாலும் அவற்றை நேர்மையான முறையில் ஏற்றுக்கொண்டு இயன்றளவு ஒழுக்கசீலர்களாக வாழ்ந்தால் ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்கலாம்.

ஒருநாள் உணவை ஒழி என்றால் ஒழியாய்
இருநாளைக்கு ஏல் என்றால் ஏலாய் – ஒருநாளும்
என்நோ, அறியாய் இடும்பை கூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது

– ஔவையார் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வத்தமிழிசையின் அன்னை

பேராசிரியை திருமதி. ஞானா குலேந்திரன்

**தெ**ய்வத் தமிழிசையின் அன்னை எனப்போற்றப்படுபவர், இற்றைக்கு ஏறத்தாழ, ஓராயிரத்து அறுநூறு ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டிலே, காரைக்கால் என்னும் ஊரில் பிறந்து, இனிய பாடல்களால் இறைவனைப் பாடிப்பரவிய காரைக்கால் அம்மையார் ஆவர். இவரின் இயற்பெயர் புனிதவதியார். இருந்தும் இவர் சைவ உலகிற்கு காரைக்கால் அம்மையார் எனச் சிறப்புப் பெயருடன் விளங்கினார். சைவத்திருமுறைகள் பன்னிரண்டினுள் காரைக்கால் அம்மையாரின் தெய்வீகத் தமிழிசைப் பாடல்கள் பதினோராந் திருமுறையாக வைத்துப் போற்றப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சைவத்தின் அருளாளர் அறுபத்து மூவருள் ஒருவராக, மூத்தவராக போற்றப்படும் இவ்வம்மையார் பிறந்து மொழி பயின்ற நாள் முதல் சிவவழிபாட்டிலும், சிவனடியார் சேவையிலும் அன்பு கொண்டு மிகுந்த ஈடுபாட்டுடன் வாழ்ந்தவர். இவரது பேசவொணாத சிவப்பற்றின் உயர்வை, ஒரு நாள், மாங்கனி ஒன்றால் உணர்ந்து கொண்ட, புரிந்து கொண்ட அவரது கணவனார், இவ்வன்னை "தெய்வம் தொழு குலத்தாள்" என இவரை வணங்கிப் போற்றிய பின் இவரிடமிருந்து ஒதுங்கிக் கொண்டார். தனது கணவனுக்கு வேண்டாத ஊனுடம்பை ஒழித்து எற்புடம்பை பேய் வடிவமாகப் பெற்றுக்கொண்ட அம்மையார், அன்றிலிருந்து மேலும் மேலும் ஈசன்பால் இடையறா அன்பும் பக்தியும் செலுத்தத் தொடங்கினார்.

இறையருளால் மெய்யறிவு வரப்பெற்ற அம்மையார் இறைவனின் அற்புதத்தை வியந்து, விதந்து எம்பெருமானது திருக்கோலக்காட்சியையும், திருவருட் செயல்களையும் அறிந்து, உரையாடி, மகிழும் வகையில் 101 பாடல்களில் "**அற்புதத்திருவந்தாதி**" பாடினார். தொடர்ந்து பிறவித்துன்பங்கள் நீங்கப் பெற்று, ஈறில்லா இன்பம் தரும் இறைவனின் திருவடிப்பேற்றைப் பெறுமாறு, 20 பாடல்களில் "**திருவிரட்டை மணிமாலை**"யைப் பாடியருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை போதாதென்று சிவபிரானின் திருக்கோலக்காட்சியைத்தான் நேரில் தரிசித்து பேரின்பம் பெறவேண்டும் என விழைந்து தன் தலையால் நடந்து, திருக்கைலைக்கு நடந்து செல்லலானார். அங்கு இவர் வருகையைக் கண்ட, கைலைநாதன் இவரை **"அம்மையே"** என்றழைக்க இவரும் **"அப்பா"** என ஈசனை அழைத்து மகிழ்ந்தார். அத்தோடு,

*"பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புண்டேல்*
*உன்னை என்றும்*
*மறவாமை வேண்டும், இன்னும் வேண்டும்*
*நான் மகிழ்ந்து பாடி*
*அறவா! நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க"*

என்னும் வரத்தை எம்பெருமானிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

*"ஆடுமா நட மும் நீ கண்டு ஆனந்தம் சேர்த்து*
*எப்போதும் பாடுவாய் நம்மை"*

என இறையருள் அம்மையாருக்குக் கிடைக்கவே, அவர் திரு ஆலங்காட்டில் கூத்தப் பெருமானின் ஞான ஆனந்தக் கூத்தைக் கண்ணாரக் கண்டு **"திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்"** பாடி மகிழ்ந்தார்.

எம்பெருமானின் தூக்கிய திருவடிக்கீழ் என்றும் அமர்ந்திருக்கும் பெற்றியைப் பெற்ற அம்மையார் இவ்விதம் பிறவிப் பயனை அடைந்தார். இவரைத் தமிழ் கூறும் நல்லுலகம் "பேயார்" என்றழைக்கின்றது. தமிழ்நாட்டில், ஏராளமான கோயில்களிலும், கேரள நாட்டிலும், இலங்கை, தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம் ஆகிய கடல் கடந்த நாடுகளிலும் அம்மையார் வழிபாடும், திருவுருவச்சிலைகளும் அமைந்திருத்தல் குறிப்பிடத்தக்கது. சைவாலயங்களில் உள்ள 63 நாயன்மார்களின் திருவுருவப் படிமங்களில் அம்மையார் ஒருவரே அமர்ந்த கோலத்தில் அமைந்திருப்பது, இவருடைய தெய்வீக ஆளுமையின் அருமைப் பாட்டைக் காட்டி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் இன்னிசையால் தேவாரம் பாடித் தமிழகமெங்கும் தெய்வீகத் தமிழிசை பரப்பிய 7 ம் நூற்றாண்டில் பக்திநெறி பரப்பிய ஞானசம்பந்தருக்கும் நாவுக்கரசருக்கும் காலத்தால் முந்தியவர் காரைக்காலம்மையார். ஞானசம்பந்தர், நாவுக்கரசர் ஆகியோரைப் போன்று "பேயார்" என்றழைக்கப் பெற்ற காரைக்கால் அம்மையாரும், இயற்றமிழிலும், இசைத்தமிழிலும் வல்லவர் என்பதை சேக்கிழார் சுவாமிகள் பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்.

*"கவுணியர், நாவுக்கரசர், பேயார் இம்மூவர்*
*கற்கும் இயல் இசைவல்லோர்"*

அம்மையார் பாடியருளிய மூத்த திருப்பதிகங்கள் இரண்டும், இனிய பண்களில் பாடப்பெற்ற இசைப்பாடல்களாம். திருவாலங்காட்டிலே, அனல் கை ஏந்தி அண்டமுற நிமிர்ந்து ஆடிய அப்பனின் ஆடலைக் கண் குளிரத் தரிசித்த பேரானந்தத்தில், நட்டபாடைப் பண்ணில் அம்மையார் பாடியருளிய மூத்த திருப்பதிகம்

*"........ அங்கம் குளிந்து அனல் ஆடும் எங்கள்*
*அப்பன் இடம் திரு ஆலங்காடே"*

என அமைந்திருத்தல் இங்கு குறிப்பிடத்தக்கது.

மிகத்தொன்மை வாய்ந்த காலத்தில் பழந்தமிழ் மக்கள் 11,991 ஆதி இசைகளை அறிந்திருந்தனர் என்கின்றது. சிலப்பதிகாரம். காலப்போக்கில், இவ்விசைகள் வாழ்வியலுக்கேற்ப, பண்படுத்தப்பட்டு, 103 பண்கள் என வரையறுக்கப்பெற்றன. இவற்றுள் அம்மையார் விரும்பித் தேர்ந்தெடுத்த இரு பண்கள். பண் நட்டபாடையும், பண் இந்தளமுமாகும். இவை முறையே பின் வந்த கம்பீர நாட்டையையும் மாயாமாளவகௌளையையும் குறிக்கும். நாதசுர இசையில் "மல்லாரி", நாட்டை பாடைப்பண்ணில் இசைக்கப்படுவதை யாம் இன்று காண்கின்றோம்.

இந்த வகையில் பண் உள்ள வரை சைவம் உள்ள வரை, தெய்வத் தமிழிசை உள்ள வரை, காரைக்கால் அம்மையாரின் திருநாமம் துலங்கும், ஒளிரும், மிளிரும் என்பதில் ஐயம் சிறிதுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்சிந்தனைகள்

ஞானேஸ்வரி ஞானசேகரம்
பழைய மாணவி, யாழ் இந்து மகளிர் கல்லூரி.

1. அறிவு சொரூபத்தை ஞானசக்தி என்றும் அறிகின்றோம்,

2. நீ ஒருவருக்குக் கொடுத்தால் அது உனக்கே கொடுத்துக் கொண்டதோயாகும்.

3. நீ ஒருவனைத் திட்டினால், ஏமாற்றினால் உன்னையே திட்டியதும், ஏமாற்றிக்கொண்டதும் ஆகும். நீ பிறருக்குத் தீங்கு செய்து கொள்கிறாய். ஏனெனில் பிறர் வேறு நீ வேறு அல்ல.

4. பிரேமைஉள்ளஇடத்தில்சத்தியம்இருக்கும். சத்தியம்இருக்குமிடத்தில் சாந்தி நிலவும். சாந்தி இருக்குமிடத்தில் ஆனந்தமிருக்கும். ஆனந்தமிருக்கும் இடமே ஆண்டவன் இருக்குமிடம்.

5. மனம் அமைதியடையும்போது கடவுளே துணை என்று எல்லாவற்றையும் விட்டுச் சரணாகதி அடையும்போது இறைவன் உங்களிடம் வந்து விடுகிறார். அவருடைய பெயரைச் சொன்னதும் உங்களுடைய மனக்கலக்கம் தீரும்.

# அருள்வாக்கு

1. உன்னிடத்திலுள்ளதை இல்லையென்னாமல் மற்றவர்களுக்குக் கொடு.

2. எங்கும் அலையாதே, இருந்தபடியே இரு. கோபத்தை விடு. இறை அருள்தானே வரும்.

3. அதிகாலை நித்திரை விட்டெழு.

4. எழும்போது ஆண்டவனை நினை.

5. காலை மாலைக்கடன்களை குறைவறச் செய்.

6. தேநீர், காப்பியை தூரத்தள்ளு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மரக்கறி உணவு மனதிற்கு மகிழ்ச்சி.
8. பசித்து வந்தோர் முகம் பார்.
9. உண்ணுமுன் ஒரு கணம் இறைவனை நினை.
10. நெற்றிக்கழகு விபூதி பூசுதல்
11. துயிலுமுன் இறைவனை பிரார்த்தி.
12. அதிகாலை எழுந்ததும் வீட்டிற்கு விளக்கேற்றி விடு.

## நாம் செய்ய வேண்டியவை

1. இறைவனை வணங்குக
2. இனிமையாகப் பேசுக!
3. உண்மையே பேசுக!
4. அன்பாகப் பேசுக!
5. நன்மையே பேசுக!
6. மெதுவாகப் பேசுக!
7. சிந்தித்துப் பேசுக!
8. சபையறிந்து பேசுக!
9. சமயமறிந்து பேசுக!
10. பேசாதிருந்தும் பழகுக
11. சொல்வதையே செய்க
12. சோம்பலை அகற்றுக
13. கோபத்தை நீக்குக
14. யோசித்துச் செய்க
15. செருக்கை அடக்குக.
16. உயர்வையே எண்ணுக

## நாம் கொள்ள வேண்டியவை

1. ஏழ்மையில் நேர்மை
2. தோல்வியில் விடாமுயற்சி.
3. துன்பத்தில் துணிவு
4. பதவியில் பணிவு
5. கோபத்தில் பொறுமை
6. செல்வத்தில் தியாகம்
7. அன்பில் தூய்மை
8. அடக்கத்தில் எளிமை
9. உழைப்பில் விருப்பம்
10. பேச்சில் சிக்கனம்
11. கல்வியில் ஆர்வம்
12. கடமையில் பற்று.
13. கடமையில் கண்ணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீதையின் சாயல்

1. வாழ்க்கை ஓர் அன்பு அனுபவிப்போம்.
2. வாழ்க்கை ஓர் அழகு அதிசயிப்போம்.
3. வாழ்க்கை ஓர் ஆன்மா உணர்ந்திடுவோம்.
4. வாழ்க்கை ஓர் இலக்கு எட்டிடுவோம்.
5. வாழ்க்கை ஓர் இரகசியம் வெளிப்படுத்துவோம்.
6. வாழ்க்கை ஓர் உறுதிமொழி நிறைவேற்றுவோம்.
7. வாழ்க்கை ஓர் விளையாட்டு விளையாடுவோம்.
8. வாழ்க்கை ஓர் வாய்ப்பு பயன்படுத்துவோம்.
9. வாழ்க்கை ஓர் வெகுமதி என ஏற்போம்.
10. வாழ்க்கை ஓர் சவால் எனச் சந்திப்போம்.
11. வாழ்க்கை ஓர் சாகசம் துணிந்து நிற்போம்.
12. வாழ்க்கை ஓர் துன்பம் வென்று நிற்போம்.
13. வாழ்க்கை ஓர் கடமை செய்து முடிப்போம்.
14. வாழ்க்கை ஓர் பாடல் என இசைப்போம்.
15. வாழ்க்கை ஓர் பயணம் நிறைவு செய்வோம்.
16. வாழ்க்கை ஓர் புதிர் விடுவோம்.
17. வாழ்க்கை ஓர் போராட்டம் போர் இடுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SONNET ON J/ H. L. C

## - An Old Girl -

There she stands - Behold her !

This young lady of Seventy five

Her head held high - our Alma mater

Watching her daughters' strive

Ever so hard to progress in life - for

They've heard of their seniors' fame

Spread far and wide at every door

Their progress speaks of her good name

In foreign lands - we down under and the maple land

Her name and fame had spread

From east to west

United they stand while their union founder

Declare JHLC now or this is the very best

None disputes her words in unison

They nod their heads approving it.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கம்

திருமதி சத்தியலெட்சுமி சிவலிங்கம்,
பழைய மாணவி, யாழ்/இந்து மகளிர் கல்லூரி

"ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்பது யாவரும் அறிந்ததே. ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் கல்வி முறை, பேச்சு முறை, உணவு முறை, நடைமுறை போன்ற சகல பழக்கவழக்கங்களிலும் ஒழுக்கம் இரண்டறக்கலந்துள்ளது. ஒழுக்கம் ஆண் - பெண் என இருபாலாருக்கும் பொதுவானது. சில பெண்கள் பொது இடங்கள், கோயில்கள், வீட்டு விழாக்கள் என எங்கு சென்றாலும், தலை விரிகோலமாகவே செல்கிறார்கள். இது நாகரீகத்தில் ஒன்றாக இருந்தாலும், பலரை முகம் சுளிக்கவே வைக்கின்றது. சென்ற வருடம் ஓர் புகழ்பெற்ற ஆலயத்தில் "தயவு செய்து, தலை விரித்து வரவேண்டாம்" என்ற வாசகம் அடங்கிய பல அட்டைகள், அங்கங்கே தொங்கவிடப்பட்டிருந்தன. அந்தச் செயல், சகலராலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. அதோடு பேருந்துகளில் செல்லும்போது சில பெண்களது அவிழ்த்து விடப்பட்ட தலைமுடியானது, பறந்து பலரின் வாயிலும் கைகளிலும் சிக்கி பலருக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துகிறது. இது தேவையா?

இதேபோல் சிறிய வயதுள்ளவர்கள், வயது கூடியவர்கள் முன்னால் கால் மேல் கால் போட்டு இருப்பதும், எடுத்தெறிந்து பேசுவதும், அவர்களின் கேள்விகளை அலட்சியப்படுத்துவதும் ஒழுக்கக்கேடுதான். நாகரீகமாக ஆடை, அணிகலன்களை அணிவது, அவரவர் சொந்த விருப்பத்திற்குரியது என ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், மற்றவை யாவும் திருத்தப்படவேண்டியவையே.

சின்ன வயதில் நாம் பேணும் ஒழுக்கம் என்னும் பண்பானது, எமது வளர்ச்சியோடு வளர்ந்து எமது குடும்பத்தை மட்டுமன்றி, நம்மைச் சார்ந்தோரையும், ஏன் தன்னுடன் சேர்ந்த சமூகத்தைக்கூட, நல்வழிப்படுத்த உதவுகின்றது.

நல்ல உணவு வகைகள் எப்படி எமது ஆரோக்கியத்தை, பாதுகாக்கின்றதோ, அதேபோல நல்லொழுக்கமானது, நம் மனதையும் நல்ல குடிமகன் என்ற உயரிய பட்டத்தையும் தந்து, ஆளுமைமிக்கவராக மாற்றுகின்றது.

சந்தனத்திற்கு, மணத்துடன், குளிர்ச்சியும் சேர்ந்துள்ள மாதிரி, ஒவ்வொரு மனிதருடனும், ஒழுக்கமானது பேச்சிலும், நடைமுறையிலும் சிறப்பாக அமையவேண்டும். ஒரு மனிதனை பூரணப்படுத்துவது ஒழுக்கமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் ஒரு குரங்கு I

**நா**ம் ஒருவருக்கு வணக்கம் செலுத்தும்போது, நாமும் மனம் நிறைவடைகின்றோம். வணக்கம் செலுத்தப்பட்டவரும் மகிழ்ச்சி அடைகின்றார். எவையெல்லாம் மனதை மகிழ்விக்கின்றனவோ, அவை யெல்லாம் பண்பினுள் அடக்கம், சமயத்துள் அடக்கம், ஒருநோக்கில், இவையெல்லாம் இறைவனுக்குச் சமர்ப்பணம்.

பணிவு, அன்பு, தியாகம், அடக்கம், புரிந்துணர்வு போன்ற நற்பண்புகளை, எந்த ஒரு மதமுமே ஒதுக்கியதில்லை. இவற்றை யாம் தவறாது வாழ்க்கையில், அன்றாடம் கடைப்பிடித்தாக வேண்டும். பொறுமையை, யாம் தவறாது கடைப்பிடிப்பது எவ்வளவு தூரம் என்பது நாம் சிந்திக்கவேண்டிய விஷயம். சில சமயங்களில் பொறுமையை யாம் இழந்து, சீற்றம் கொண்டு, அவமானப்படக் காரணமாக இருப்பது, எமது மனமாகும். இதனால்தான் "மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்" என்று சொல்லி வைத்தார்கள் எமது முன்னோர்கள்.

உதாரணத்துக்குப் பாருங்கள்! கப்பல் ஒன்று கடலில் பயணித்துக் கொண்டிருக்கையில், காற்றுப்பக்கம் அங்குமிங்கும் அலைகளின் அசைவிற்கேற்ப அது அசையத்தான் செய்கிறது. ஆனால், கப்பலில் பூட்டியிருக்கும் காந்த ஊசி மாத்திரம் எவ்வித சலனமுமின்றி, வடக்கு நோக்கியே பதிவாகவுள்ளது. இதே போன்று, எமது எண்ணங்களையும் எந்தவொரு சலனமுமின்றி ஈசன்பால் செலுத்துவோமேயானால், எமது மனதை அங்கிங்கென அலையவிடாது காந்த ஊசிபோல் நிலையாக வைத்திருக்க முடியும். இஃது அவசியமும் கூட. எம்முள் இருக்கும் நற்பண்புகளான பொறுமை, புரிந்துணர்வு போன்ற நற்பண்புகளை யாம் உணர்ந்து நடப்போமேயானால், எமக்கு எந்தவித பிரச்சினைக்கும் இடமில்லை. முதலில் எம்மிடமிருக்கும் நற்பண்புகளை செயன்முறைப் படுத்த யாம் தெரிந்திருக்கவேண்டும்.

உதாரணத்திற்கு ஒரு கதை சொல்வேன். ஒரு பட்டினத்து வீதியில் ஒரு பிச்சைக்காரன், வீதியோரமாக கைநீட்டியபடி நின்று நெடுங்காலமாகப் பிச்சையெடுத்துக் கொண்டு நிற்பான். என்றுமே அவன் எவரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரந்து, வழிமறித்து சிரமப்படுத்தியதில்லை. ஒருநாள் திடீரென அவன் அந்த இடத்திலேயே வீழ்ந்து இறந்து கிடந்தான். அவனுடன் பரிச்சயமான பாதசாரிகள், அவனுடம்பை அகற்றி, ஆவன செய்தனர். அவன் எந்தவித சிரமமும் தராதவனாதலால், அவனை நேசித்த அவர்கள், அதே இடத்தில் அவனுக்கு ஒரு சிலை எழுப்ப முடிவுசெய்து, அந்த இடத்தைத் தோண்டவே, அங்கு "ணங்" என்றோர் சத்தம் கேட்டது. தொடர்ந்து தோண்டிப் பார்க்கையில் உள்ளே ஒரு புதையல் அகப்பட்டது.

வருடக்கணக்காக ஒரு பைசாவுக்காக அமைதியாகக் கையேந்தி நின்ற, அந்த ஏழைப்பிச்சைக்காரனுக்கு, இந்த அரும்பெரும் உண்மை தெரியாமல் போனதே என்று ஆதங்கப்பட்டனர் அங்கு நின்றோர்.

அப்போது, அவ்வழியே வந்த ஒரு துறவி நடந்ததைக் கேள்வி யுற்றதும் கூறினார்.

"இதே நிலைதான் எங்களுக்கும். எம்முள் குவிந்திருக்கும் சத்தியம், பொறுமை, ஞானம், விவேகம், இறையுணர்வு முதலிய செல்வங்களை நாம் உணராமல், இவையெல்லாம் வெளியே இருப்பதாக எண்ணி அலைகின்றோம். இவ்வண்ணம் எமது காலம் அவமே கழிகின்றது"

சுற்ற நின்றவர்கள், அப்போதுதான் இது பற்றிச் சிறிது சிறிதாகச், சிந்திக்க ஆரம்பித்தார்கள்.

வாசகர்களே இதில் நாம் எந்த ரகம்!

*நன்றி*

*- சைவ நற்சிந்தனைகள் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்தினரால் (கொழும்புக் கிளை) கௌரவிக்கப்பட்டோர்

செல்வி சீதா செல்லையா

திருமதி கௌரி ரமணா

திருமதி விமலா மணிவாசகன்

## கல்லூரியின் சிறந்த மாணவிகள்

| | |
|---|---|
| 2001 | செல்வி காயத்திரி சிற்சபேசன் |
| 2002 | செல்வி ஜெயப்பிரபா ஜெகதீஸ்வரன் |
| 2003 | செல்வி நிலக்ஷி மகாதேவா |
| 2004 | செல்வி துளசி கந்தசாமி |
| 2005 | செல்வி பாபினி பரஞ்சோதி |
| 2006 | செல்வி கபிலினி அருட்செல்வன் |
| 2007 | செல்வி கோபிகா குலசிங்கம் |
| 2008 | செல்வி மோகனரஞ்சனி ரவீந்திரன் |
| 2009 | செல்வி செல்வலச்சுமி செல்வராஜன் |
| 2010 | செல்வி நாராயணி வெற்றிவேல் |
| 2011 | செல்வி பிரவீணா விஜயகுமார் |
| 2012 | செல்வி அத்மிகா முருகையா |
| 2013 | செல்வி சுபலக்சுமி செல்வராஜா |
| 2014 | வழங்கப்படவில்லை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வி. சீதா செல்லையாவுக்கான கௌரவிப்பு

திருமதி அபிராமி கயிலாசபிள்ளை,

இங்கு வருகை தந்திருக்கும் சபையோருக்கு எனது அன்பான வணக்கங்கள்.

அன்பும், பண்பும், அறிவும், ஆற்றலும் மிக்க சீதா செல்லையாவுக்கு, பாராட்டு என்ற ரீதியில் சில வார்த்தைகள் கூறுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். சீதா செல்லையா ஆரம்பக்கல்வியை கொழும்பில் ஆரம்பித்தார். 1958 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் பின் யாழ்ப்பாணத்திற்கு வந்து யாழ் இந்து மகளிர் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தார். இவர் கல்வியில் மட்டும் அல்லாமல் விளையாட்டுத் துறையிலும் மிகவும் சிறந்து விளங்கிப் பல பரிசில்களைப் பெற்றார்.

பின்னர் பேராதனைப் பல்கலைக்கழக்த்தில் இரசாயனச் சிறப்புப் பட்டதாரி பட்டத்தைப் பெற்றார். பேராதனை பல்கலைக்கழகத்திலும், கொழும்பு பல்கலைக்கழகத்திலும் சில வருடங்கள் பணியாற்றிய பின், கொழும்பு றோயல் கல்லூரியில் உயர்தர வகுப்பு இரசாயன ஆசிரியையாக கடமையாற்றினார். அங்கு "சீதா விஞ்ஞான மன்றம்" தமிழ்ப் பிரிவிற்கும், இந்து மாணவ மன்றத்திற்கும் தலைமை ஆசிரியையாக இருந்து மாணவர்களின் ஆற்றலை வெளிக் கொண்டு வருவதற்கு அரும்பாடு பட்டார்.

சீதா சிறந்த கற்பிக்கும் ஆற்றலைக் கொண்ட ஆசிரியை ஆவார். அவரது எண்ணற்ற மாணவர்கள் உலகின் பல பாகங்களிலும் மிகவும் உயர்ந்த பதவிகளில் உள்ளார்கள். அவர்களில் எனது மகனும் மருமகனும் உள்ளடங்குவர். யாழ் இந்து மகளிர் கல்லூரியில் சிறிது காலம் அதிபராக இருந்த திருமதி Clare Motwani யின் மகள் திருமதி Goolbai Gunasekara Asian International School இன் அதிபராவார். அவரது பாடசாலையில் இரசாயன ஆசிரியையாக கடமையாற்ற எண்ணி, றோயல் கல்லூரியிலிருந்து இளைப்பாறினார். தற்பொழுது அவர் அப்பாடசாலையின் உப தலைவராகவும் உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கா கலிபோர்னியாவிலுள்ள Stanford பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டப்படிப்பின் இறுதியாண்டுப் பரீட்சையில் முதல் ஐந்து வீதத்திற்குள் சித்தியெய்திய இருபது (20) மாணவர்களில் S. S. மோகன் ஒருவரே இலங்கையைச் சேர்ந்தவர். S. S. மோகனுக்கு Termans Award வழங்கப்பட்டது. அத்துடன் மோகனின் கல்வித் திறமைக்கு உறுதுணையாக இருந்து ஊக்குவித்த கல்லூரி ஆசிரியை சீதாவைப் பாராட்டி சான்றிதழும் வழங்கப்பட்டது. இது ஒரு அரிய சந்தர்ப்பமாகும்.

செல்வி சீதாவிற்கு எல்லாம் வல்ல இறைவன் நல்ல ஆரோக்கியத்தைக் கொடுத்து. மேலும் பல மாணவர்களுக்கு ஒரு ஊக்கியாகவும் வழிகாட்டியாகவும் இருக்கவேண்டும் என வேண்டி விடைபெறுகின்றேன்.

நன்றி. வணக்கம்.

## விசேடதின வழிபாடு

| வாரம் | தெய்வம் | தினம் |
|---|---|---|
| ஞாயிறு | சிவன் | சூரியன் |
| திங்கள் | அம்பிகை | சந்திரன் |
| செவ்வாய் | முருகன் | செவ்வாய் |
| புதன் | விஷ்ணு | புதன் |
| வியாழன் | பிரம்மா | வியாழன் |
| வெள்ளி | இந்திரன் | வெள்ளி |
| சனி | யமன் | சனீஸ்வரன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வி. சீதா செல்லையா அவர்களின் ஏற்புரை

**யா**ழ் இந்து மகளிர் பழைய மாணவி சங்கத்தின் (கொழும்புக் கிளை) தலைவி திருமதி. அபிராமி கயிலாசபிள்ளை அவர்களே, பிரதம விருந்தினர் திரு. வி. கயிலாசபிள்ளை அவர்களே, மற்றும் மேடையில் அமர்ந்திருக்கும் பெரியோர்களே, இவ்விழாவினைச் சிறப்பிக்க வந்துள்ள சகோதர, சகோதரிகளே உங்கள் எல்லோருக்கும் எனது பணிவான வணக்கம்.

பழைய மாணவிகள் சங்கம் என்னைப் பாராட்டியதற்கு மிகவும் மனமார்ந்த நன்றி. பாடசாலை செல்வது வெறும் பொழுதுபோக்கு என்ற எண்ணம் கொண்ட என்னைத் தட்டியெழுப்பி, எனக்குள் உறங்கிக் கிடந்த திறமைகளை வெளிக்கொண்டு வந்த பெருமை யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கே உரித்தாகும். இதில் முக்கிய காரணகர்த்தாவாக இருந்த பௌதீக ஆசிரியை செல்வி இரத்தினம் அன்னபூரணி அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை இத்தருணத்தில் தெரிவிக்கின்றேன்.

கல்வி என்றால் என்ன? அதன் முக்கியத்துவம், குறிக்கோள், வாழ்க்கையில் ஒரு இலட்சியம் இருத்தல் வேண்டும், என்று எல்லாவற்றையும் இக்கல்லூரியில் தான் நான் உணர்ந்தேன். இப்பாடசாலைக்கு வந்திருக்காவிட்டால் நான் என்னவாகி இருப்பேனோ தெரியாது.

நான் எனது அனுபவத்தில் இருந்து ஒரு மாணவனின் எதிர் காலம் எவ்வளவு தூரத்தில் ஆசிரியரில் தங்கியுள்ளது என அறிந்ததால் தான் இன்று ஒரு சிறந்த ஆசிரியையாக உள்ளேன்.

இந்து மகளிர் கல்லூரி, இறைவன் அருளால் மேலும் தழைத்தோங்க வேண்டும் என வேண்டிக் கொண்டு விடை பெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி கௌரி ரமணாவிற்கான கௌரவிப்பு

கலாபூஷணம், திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு,
பழைய மாணவி, யாழ் / இந்துக்கல்லூரி
முன்னாள் அதிபர், யாழ் / நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்:

**ப**ண்பான சபையோருக்கு எனது அன்பான வணக்கங்கள்.

அன்பும் அறிவும் ஆற்றலும் மிக்க எங்கள் கௌரி ரமணாவுக்கு, பாராட்டு என்ற வகையில் சில வார்த்தைகள் சொல்வதில் மிக்க மகிழ்ச்சி யடைகின்றேன்.

"தாயைப் போல் பிள்ளை, நூலைப்போற் சேலை" என்பது பழமொழி. இம்மொழிக்கு இணங்க அசல் அவரது தாயைப் போன்ற வடிவமும் அமைதியும் கொண்டவர் கௌரி ரமணா. இவரின் அன்பு அன்னை, தெய்வநாயகி என்னோடு தமிழ் நாட்டில் பல்கலைக்கழகத்திலே ஒன்றாகக் கற்றவர். அவர் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. கணவரும் புகழ் பெற்ற யாழ் / இந்துக் கல்லூரியிலே, ஆசிரியராகப் பணியாற்றியவர். பல்கலைக் கழக வாழ்வு முடிவடைந்த பின் நானும் தேவாவும் அதிகம் சந்தித்ததில்லை. பல்கலைக்கழகத்தில் அமைதியாக, தான் உண்டு. தன் பாடுண்டு என்று இருந்த ஒரு சில மாணவிகளுள் குறிப்பிடத்தக்கவர் இவரது அன்னை தெய்வநாயகி. பேச்சில் இனிமையான பண்பு, அமைதி, நடப்பில் அடக்கம், கல்விப் படிப்பே கடமையாகச் செயற்பட்டு வந்தவர் என் நேசத்துக்குரிய தேவா.

காலங்கள் உருண்டோடின. நீண்டதோர் இடைவெளியின் பின்னர், இங்கு, இதே மண்டபத்தில் எங்கள் கூட்டத்தில் முதன்முறையாகக் கௌரி ரமணாவைக் கண்டேன். வியப்பும் களிப்பும் அடைந்தேன். உரித்து வைத்தாற் போல், தாயைப் போல் காட்சி அளித்தார் கௌரி. ஈசனின் படைப்பில் தான் எத்தனை அற்புதம்!? சற்றுத் தயக்கத்தோடு கேட்டேன். "நீங்கள் தெய்வநாயகியின் மகளா?" ஒரு புன்னகையோடு தலை ஆட்டினார் ரமணா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமணா சளைக்காமல் கல்வி கற்று இப்போது அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் பிரதி இரசாயனப் பகுப்பாய்வாளராகக் கடமையாற்றுகின்றார்.

அவருக்கு என்னுடைய வாழ்த்துக்கள். ரமணா எங்கள் சங்கத்திற்காக நன்றாக உழைத்து வருதல் கண்கூடு. தொடர்ந்து அவரது சேவை, எமது சங்கத்துக்குத் தேவை என்பது என் அபிப்பிராயம். நீங்களும் எனது இந்த அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகின்றேன். அவருக்கு எல்லாம் வல்ல இறைவன் நல்லாரோக்கியத்தையும் வளமான வாழ்வையும் தொடர்ந்து அருள எம்பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

நன்றி வணக்கம்

**ஐம்பெருங் காப்பியம்**

சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி

**ஐஞ்சிறு காப்பியம்**

சூளாமணி, உதயணன் காதை, நீலகேசி. நந்தகுமார காவியம், யசோதா காவியம்

**ஏழு ஸ்வரங்கள்**

ஸட்சம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம்

**ஏழு மலைகள்**

கைலை, இமயம், மந்தரம், விந்திய மலை, நிடத மலை, ஏமகூட மலை, நீலகிரி மலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி கௌரி ரமணா அவர்களின் ஏற்புரை

**த**லைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்களே, பிரதம விருந்தினர் திரு. வி. கயிலாசபிள்ளை அவர்களே, மற்றும் மேடையில் வீற்றிருக்கும் பெரியோர்களே, இவ்விழாவினைச் சிறப்பிக்க வருகை தந்துள்ள சகோதர சகோதரிகளே. உங்கள் எல்லோருக்கும் வணக்கம்!.

இவ்வருடம் பழைய மாணவிகள் சங்கம் என்னைப் பாராட்டியதற்கு நன்றி. அதிலும் அந்த பாராட்டுரை எனது அம்மாவின் நண்பியான திருமதி ராஜேஸ்வரி ஜெகானந்த குருவினால் பாராட்டப்பட்டது. எனது மறைந்த அம்மாவே வந்து வாழ்த்தியது போல் இருந்தது. திருமதி ஜெகானந்த குரு அவர்களே உங்களிற்கு எனது நன்றிகள்.

இந்த நேரத்திலே என்னை இவ்வாறு உயர்ந்த பதவியை வகிக்க உதவிய எமது பாடசாலையையும் ஆசிரியர்களையும் நினைவு கூர்ந்து அவர்களுக்கும் நன்றி சொல்லக்கடமைப்பட்டுள்ளேன். எமது பழைய மாணவிகள் சங்கத்திற்கு ஆதரவு அளிப்பதலும் எம் பாடசாலைக்கு உதவுவதிலும் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது சங்கத்திற்கு இளம் வயதுடைய பழைய மாணவிகள் மிகமிகக் குறைவாக உள்ளனர். எனவே எமது சங்கத்தில் இளவயது அங்கத்தவர்களைச் சேர்ப்பதில் நாம் ஆர்வம் காட்டவேண்டும் என்று கேட்டு மீண்டும் எனது நன்றிகளைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

வணக்கம்

**தசு அவதாரங்கள்**

**மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமணன், பரசுராமர், பலராமன், ஸ்ரீ இராமன், கிருஷ்ணர், கல்கி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கச் செயற்குழு உறுப்பினர் திருமதி தயாநிதி செல்வநாயகத்தின் உரை

“யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் கொழும்பில் ஒரு சங்கத்தை உருவாக்கவேண்டும் என்ற எண்ணத்தினை, காலஞ்சென்ற எமது ஆசிரியை திருமதி புஷ்பம் சுப்பிரமணியம் கருத்துத் தெரிவித்தபொழுது, செல்வி சற்சொரூபவதி நாதனையும் அழைத்து கலந்தாலோசித்து செயற்பட்டோம். அதன் விளைவாக இன்று ஆலவிருட்சம் போல் விரிவடைந்த கொழும்புச் சங்கம் பல ஆணித்தரமான செயல்களைச் சாதித்துள்ளது. திருமதி அபிராமி கயிலாசபிள்ளை, திருமதி சிவகாமி அம்பலவாணர், திருமதி விமலா மணிவாசகன், திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு போன்றோரின் அயராத உழைப்பினால் நாம் இன்றையதினம் இவ்விழாவினை கொண்டாடுகின்றோம்.

திருமதி விமலா மணிவாசகன் எமது கல்லூரியின் பழைய மாணவியும், எமது சங்கத்தின் தோற்றம், வளர்ச்சி அதன் செயற்பாடுகள் யாவற்றிலும் பெரும்பங்கு ஆற்றி வருகின்றார் என்பது யாவரும் அறிந்ததே. நான் அவருடன் நெருங்கிப் பழகி, அவரது இன்பதுன்பங்களில் பங்கு கொண்டுள்ளேன். விமலாவின் வாழ்க்கையை நோக்கும் பொழுது அவருக்கு பல சோதனைகள் ஏற்பட்டன. இருந்தும் அவர் தனது சிந்தனைகளைப் பயனுள்ளதாக்கி ஆக்கபூர்வமான செயற்பாடுகளை சாதித்துள்ளார். அவர் எமது சங்கத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டுள்ளார்.

அவரின் வாழ்க்கையில் எவ்வளவோ துன்பங்கள் ஏற்பட்டுள்ளன. அவரது அன்புக்கணவர் கந்தையா மணிவாசகன் இலங்கைத்துறைமுக அதிகாரசபை பொறியியலாளராக கடமை ஆற்றிக்கொண்டிருந்த வேளை, 1983 யூலை 29ந் திகதி கொழும்பு கிருலப்பனையிலிருந்து பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி முகாமிற்குச் செல்லும்பொழுது அகாலமரணமடைந்தார். பாழும் விதி அத்தோடு எங்கள் விமலாவை விட்டு வைக்கவில்லை. அவரது ஒரேயொரு மகள் ஒன்பது வயதுப் பாலகியான வாசுகியை 1990 மார்ச் மாதம் இழந்துவிட்டார். எல்லாத் துன்பங்களையும் மனதிற்குள் புதைத்துவிட்டு எங்கள் கல்லூரிக்காக பல நற்பணிகளைச் செய்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களது பழைய மாணவிகள் சங்கத்தின் ஒவ்வொரு வைபவத்திலும் அளப்பரிய சேவைகள் செய்துள்ளார். வருடந்தோறும் வெளிவரும் எங்கள் சஞ்சிகையான "யாழ்நாதம்" ஒவ்வொரு வருடமும் புதுப்பொலிவுடன் வெளிவருவதற்கு அவரும் பாடுபடுகின்றார்.

எங்கள் சங்கத்தின் உறுப்பினரின் தன்னலமற்ற சேவைகளினால் நாம் பயனுள்ள திட்டங்களை அமுல்படுத்தியுள்ளோம். ஒவ்வொரு வருடமும் நமது அங்கத்தவர்களின் செயற்பாடுகளுக்கேற்ப சிறந்த பெண்மணிகளை பாராட்டிக் கௌரவிக்கின்றோம். அதற்கேற்ப இன்று மூன்று சகோதரிகள் மேடையில் அமர்ந்திருக்கின்றனர். திருமதி விமலா மணிவாசகனைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறுவதற்கு நான் அழைக்கப்பட்டேன். மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

நண்டு, சிப்பி, வேய், கதலி நாசமுறுங் காலத்தில் கொண்ட கரு அளிக்கும் கொள்கைபோல் போதம், தவம், கல்வி போன்ற வரும் காலம் அயல் மாதர் மேல் வைப்பர் மனம்

– நல்வழி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி விமலா மணிவாசகனின் ஏற்புரை

பிரதம அதிதி மனிதநேயர் திரு. வி. கயிலாசபிள்ளை ஐயா அவர்களே, பிரதம அதிதியின் பாரியாரும் யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் (கொழும்பு) தலைவியுமான 'பார் புகழ் சேவகி' திருமதி. அபிராமி கயிலாசபிள்ளை அம்மா அவர்களே, சங்க உறுப்பினர்களே, இங்கு எமது அழைப்பினை ஏற்று வருகை தந்திருக்கும் பெரியோர்களே, தாய்மார்களே, சகோதர சகோதரிகளே, சிறார்களே உங்கள் எல்லோருக்கும் எனது அன்பான வணக்கம்.

இன்றைய நிகழ்ச்சியில் கௌரவிக்கப்படும் ஒருவராக என்னை தெரிந்தெடுத்த சங்க உறுப்பினர்களுக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது சங்கத்தின் பிரதான நோக்கம் எம்மை எல்லாம் ஆளாக்கிய கல்லூரிக்கு எம்மாலான, உதவிகளை செய்து கல்லூரி மேலும் மேலும் சிறப்பான சேவைகளை மாணவிகளுக்கு ஆற்றி அவர்களை முன்னேற்றச் செய்வதாகும். கடந்த பல வருடங்களாக நாங்கள் இப்பணியை இயன்றளவு செய்து வருகிறோம். நான் இவற்றில் ஈடுபடும்போது எனக்கென்று பலனை எதிர்பார்ப்பதில்லை. ஒரு குழுவாக எல்லோருடனும் சேர்ந்து இயங்குவதே எனது விருப்பமாகும். காணும் பலனுக்கு எல்லோரும் உழைத்துள்ளோம். எனவே இன்றைய கௌரவம் உண்மையில் உங்கள் எல்லோருக்கும் கிடைக்கும் கௌரவம் என்பதே எனது கருத்தாகும்.

எம்முடைய செயற்பாடுகளையும் எமது கருத்துக்களையும் ஏனையோர் அறியச் செய்வதும் ஒரு நற்செயலாகும். இதன்மூலம் இளைய பழைய மாணவிகளின் கவனத்தினை கவர இடமிருக்கிறது. இதற்கென எமது சங்கம் "யாழ். நாதம்" என்ற சஞ்சிகையை வருடமொரு முறை பிரசுரித்து வருவது உங்களுக்குத் தெரியும். ஆரம்பத்தில் இதற்கு எனது மூத்த சகோதரி திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்கள் ஆசிரியையாக பல ஆண்டுகள் கடமை ஆற்றினார்கள். கல்வி கேள்விகளிலும் சரி ஏனைய தகைமைகளிலும் சரி அவர்களுக்கும் எனக்கும் மலைக்கும் மடுவுக்கும் போன்ற இடைவெளி உண்டு. எனினும் அவர்கள் காட்டிய வழியே இதைச் சில காலம் செய்து வந்திருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணினிமூலம் தமிழில் அச்சு அடிப்பது ஒருவருக்கு தெரிந்திருந்தால் அது மிகவும் உதவியாக இருக்கும் ஆரம்பத்தில் நான் தமிழில் அச்சடிக்க முயன்றபோது கணினியில் "எலி" (Mouse) பாவிப்பது ஒரு பாரிய சவாலாக இருந்தது. நிஜ எலி ஓடித்திரிவது போல கணினி எலி கையில் சரியாக பிடித்து இயக்க முடியாமல் எதிரில் உள்ள திரையில் 'கேர்சரை' ஓடித்திரியச் செய்யும். இது போன்ற பல சவால்களை சமாளித்து கணினி இயக்க எனக்கு கற்றுக் கொடுத்த ஆசானும் அக்காதான். காலக்கிரமத்தில் தமிழில் அச்சு அடிக்க ஓரளவு கற்றுக் கொண்டேன். இது எனக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும்.

அக்கா வெளிநாட்டில் அதிக நாட்கள் வசிக்கத் தொடங்கியபின் எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உதவி வருவது எனது பெரிய மாமனாரான திரு. அம்மையப்பர் ஆவார். மிகவும் பொறுமையும் இரு மொழிகளிலும் திறமையும் கொண்ட அவர் ஆவணங்களை சரிபார்த்து நான் கேட்கும்போதெல்லாம் உதவுவார். எங்கள் பக்கத்து வீட்டில் அவர் பல காலம் தன் மகள், மருமகன் ஆகியோருடன் வசித்து வந்தார். அவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிப்பதில் இத்தருணத்தில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அடுத்து அண்மையில் எனது தாயாரை இழந்து தவிக்கும் எனக்கு ஒரு தாய்போல் ஆறுதல் தந்து கொண்டிருக்கும் எங்கள் தலைவி 'பார் புகழ் சேவகி' திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அம்மாவை நான் குறிப்பிட விரும்புகிறேன். இப்பொழுது அருகில் எனது பெற்றோர் ஸ்தானத்தில் இருப்பது அவரும் அவருடைய கணவருமாகிய மனிதநேயர் திரு. வி. கயிலாசபிள்ளை ஐயாவும் ஆவர். அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றிகள்.

யாழ் இந்து மகளிர் கல்லூரியும் அதன் சேயான யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையும் மேன்மேலும் வளர்ந்து, இந்து சிறுமிகளுக்கு சகல கலைகளையும் புகட்டி மாண்புமிகு பெண்களாக உருவாக்க நடுத்தோட்ட இராஜவரோதய பிள்ளையாரை வேண்டிக் கொண்டு என் ஏற்புரையை முடித்துக்கொள்கிறேன்.

நன்றி. வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JAFFNA HINDU LADIES COLLEGE

There she stands – Behold her!

This young lady of seventy five.

Her head held high, our Alma mater

Watching her daughters strive

E'er so hard to progress in life – for

They' ve heard of their seniors' fame

Spread far and wide at every door.

Their progress speak of her good name

In foreign land U.K. down under and the maple land

Yes, Her name has spread, the world over

From east to west and north to south.

United they stand, while their Union founder.

Declares JHLC now or then is the very best.

In chorus all shout sure, sure she is!

**Thilaka Wijeyaratnam**
**nee Aiyadurai**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Educating & Enriching the Young Mind

**Thilaka Wijeyaratnam**
**nee Aiyadurai**

"The foundation of every state is the education of the youth." How true. And the education system of a country should bring out the best in the youth if the country should progress.

Education is not just a systematic training or instruction of the mind. Nor is it just a maelstrom of educational ideals. Education is that which helps to develop one's outlook make him/her a good citizen.

A Sanskrit verse runs as follows' "The wise seek knowledge as though they would never die or grow old, and acquire merit as though they would die the very next day."This enumerates man's quest for knowledge from age old times. Almost every nation has a proverb or a maxim to this effect.

Education has always been upheld by all civilizations. An educator said, as an apple is not in any proper sense an apple until it is ripe, so a human being is not in any proper sense a human being until he/she is educated.

## The genesis of education

Education is a process which begins after birth. Asians believe it begins in the womb itself. Parents try to train the infant to behave according to their culture and traditions. Later comes schooling - a formal education

It consists of experiences that are meticulously and methodically planned. Right from the beginning, everyone accepted the goal of development skills in the three R's - reading, writing and arithmetic. But education proper should go beyond it. In the secondary school the student goes through various programmes, academic studies, vocational or business courses.

There is- also a stress on the training of the mind and cultivation of the intellect. A school life, rich and meaningful, helps the child to develop into a fully fledged, educated human being.

The mind is the premise on which educational positions are based. There are many schools of thought on this subject. Some hold the mind as purely



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

intellectual and cognitive and separate from the physical and emotional self.

Yet another school of thought says the mind, body and emotions are a unity, each affecting the other. Whatever it is, a systematic training to lead to disciplined thinking is the goal of good education.

Why should a child be taught? Teaching is necessary for the development of the child. An interest in studying automatically disciplines the child. External discipline from the teacher therefore is not necessary.

What should be taught? The contents of the subject should be determined by the needs and interests of the developing Child.

When the teachers work with the children, they can determine the content of the subject. The contents should be meaningful to the children.

## Teaching methods

Each teacher can adopt the method she/ he thinks is suitable for the child or children she/he is handling. But in general the method of teaching should be designed to develop the potentialities of the whole child. The teacher is no more a figure of authority. Now the teacher is considered a guide. The teacher by her personality, by her capability to impart knowledge by her thorough knowledge of the subject and by her command of the language should create an interest in the child. Physical activities and expressions of emotions should be encouraged.

These are indispensable parts of education. Outdoor work is both a refreshing and invigorating experience for the child. Remember the old saying, 'All work and no play makes jack a dull boy.' It holds good even today. Books and instructional materials are usually designed to help the child gain higher academic performance. 'Teaching aids such as films and recordings also are a great help in the classroom.

Educational reforms are put forward by the Education Ministries of many countries with a stress on practical work to meet the challenges of the 21st century. Well and good if these educational reforms can reach every nook and corner of the country outlaying social ills like inequity and injustice, arrest youth unrest and contribute to the economic growth of the country. If these reforms prove otherwise, heaven help the countries from what could happen to them!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் இந்து மகளிர் கல்லூரி
# பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு
# இருபத்தோராவது ஆண்டு அறிக்கை – 2014

சங்கத்தின் இருபத்தோராவது ஆண்டுப்பொதுக் கூட்டம் 2015ம் ஆண்டு தை மாதம் 31ம் திகதி திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்களின் தலைமையில் வெள்ளவத்தை இராமகிருஷ்ண வீதியில் அமைந்துள்ள சண்முகாஸ் உணவகத்தில் மதியபோசனத்துடன் நடை பெற்றது.

**இருபத்தோராவது ஆண்டு செயற்குழு அங்கத்தவர்கள் பின்வருமாறு:-**

| | | |
|---|---|---|
| **போஷகர்** | :- | திருமதி சரஸ்வதி ஜெயராஜ் |
| | | திருமதி உமாராணி குமாரசாமி |
| **தலைவி** | :- | திருமதி அபிராமி கயிலாசபிள்ளை. |
| **உபதலைவிகள்** | :- | திருமதி தயாநிதி செல்வநாயகம் |
| | | திருமதி பொன்மலர் கந்தசாமி |
| **செயலாளர்** | :- | திருமதி மிதிலா ஸ்ரீ பத்மநாதன் |
| **உபசெயலாளர்** | :- | திருமதி விமலா மாணிக்கவாசகன் |
| **பொருளாளர்** | :- | திருமதி சிவமலர் சுப்பிரமணியம் |
| **உபபொருளாளர்** | :- | திருமதி கௌரி ரமணா |
| **நிர்வாகக்குழு** | :- | திருமதி பிரேம்குமாரி கலைநாதன் |
| | | திருமதி சின்னையா கலை அரசி |
| | | திருமதி ருக்மணி அரசரட்ணம் |
| | | செல்வி சற்சொரூபவதி நாதன் |
| | | திருமதி புவனேஸ்வரி யோகலிங்கம் |
| | | திருமதி அருளாம்பிகை கனகேந்திரன் |
| | | திருமதி திலகா விஜயரட்ணம் |
| | | திருமதி மகேஸ்வரி கணேசமூர்த்தி |
| | | திருமதி கமலேஸ்வரி திருநாவுக்கரசு |
| | | திருமதி மங்களேஸ்வரி சிவராஜா |
| | | திருமதி சசிகலா சுரேஷ் |

**யாழ்நாதம் ஆசிரியை** :-திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு

**உதவி ஆசிரியை** :- திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்

**பொன்விருது** :- எங்கள் கல்லூரியின் 2012 ம் ஆண்டுக்கான சிறந்த மாணவிக்கான பொன்விருது எமது சங்கத்தினால் செல்வி சுபலக்ஷ்மி செல்வராஜனுக்கு வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு உதவி :-**

எங்கள் சங்கத்தின் அன்பளிப்பான நிலையான வைப்பிலுள்ள ரூபா 500,000/= த்தில் வரும் வட்டிப்பணத்தில் திறமையான, வசதி குறைந்த 8 மாணவர்களுக்கு மாதந்தோறும் தலா ரூபா 500/= வழங்கப்பட்டு வருகின்றது.

## இவ்வருடத்தின் நிகழ்வுகள்

**இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவிகளுக்கு உதவி :-**

எங்கள் சங்கத்தின் அன்பளிப்பான நிலையான வைப்பிலுள்ள ரூபா 100,000/= த்தில் வரும் வட்டிப்பணத்தில் திறமையான, வசதி குறைந்த 3 மாணவர்களுக்கு வருடந்தோறும் தலா ரூபா 3500/= வழங்கப்பட்டு வருகின்றது.

கல்லூரி வர்த்தக மன்றத்தின் வளர்ச்சிக்கு 25,000/= திருமதி மிதிலா பத்மநாதனால் வழங்கப்பட்டது.

**சங்க அங்கத்துவம் :-**

எங்கள் சங்கம் வடகீழ் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளனத்தில் (வ. கீ. பி. மா. சம்) ஓர் அங்கத்துவ சங்கமாக தொடர்ந்தும் இருக்கின்றது.

எமது சங்கக் கூட்டங்களையும் ஏனைய நிகழ்வுகளையும் நடத்துவதற்கு இலவசமாக சரஸ்வதி மண்டபத்தைத் தந்துதவும் இந்து வித்தியாவிருத்திச் சபைக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

எங்கள் சங்கக் கணக்குகளை இலவசமாக கணக்காய்வு செய்து தரும் திரு. சச்சிதானந்தனுக்கும் இதை ஒழுங்கு செய்து தந்த திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தனுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அலுவல்களில் எனக்கு உறுதுணையாக இருந்த எங்கள் சங்கத் தலைவிக்கும் உப தலைவிக்கும், பொருளாளருக்கும், நிர்வாகக்குழு அங்கத்தவர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எங்கள் சங்கமும் கல்லூரியும் தொடர்ந்து வளர்ச்சிப்பாதையில் முன்னேற கல்லூரி வளாகத்திலுள்ள நடுத்தோட்ட இராஜவரோதயப்பிள்ளையார் அருள்புரிவாராக.

திருமதி மிதிலா ஸ்ரீபத்மநாதன்
பொதுச் செயலாளர்

திருமதி அபிராமி கயிலாசபிள்ளை
தலைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி செலுத்துகின்றோம்

## திருமதி புஷ்பம் சிவகுருநாதன்
## நல்லூர்
## ஓய்வுநிலை ஆசிரியை யாழ்/ இந்து மகளிர் கல்லூரி



திருமதி புஷ்பம் சிவகுருநாதன் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் 1965 தொடக்கம் 1988 ல் ஒய்வு பெறும் வரை விவசாய ஆசிரியையாக இருந்தார். இவரது உயர்ந்த தோற்றமும் சிரித்த முகமும் இன்னமும் எங்கள் மனக்கண் முன்னால் நிற்கின்றது.

இவருடன்சேர்ந்து எமதுபாடசாலைத்தோட்டமும் எங்களுக்குநினைவு வருகிறது. இவர் தனது கூடிய நேரத்தை பாடசாலைத் தோட்டத்திலேயே செலவழிப்பார். திராட்சைத் தோட்டத்தையும் வெற்றிகரமாகச் செய்தவர்.

இவரது மகள் நந்தினி வைத்தியராகத் அமெரிக்காவில் கடமையாற்றுகிறார். இவரிடம் கல்வி கற்ற பல மாணவர்கள் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குகின்றனர். இவரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறோம்.

பழைய மாணவர்
யாழ் / இந்து மகளிர் கல்லூரி.
கொழும்புக் கிளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவிப்பு விழாவின் மூன்று நாயகிகள்



திருமதி விமலா
மணிவாசகம்



செல்வி சீதா
செல்லையா



திருமதி கௌரி
ரமணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி பஞ்சலக்ஷ்மி பத்மநாதனின் கர்நாடக இசைநிகழ்ச்சி




சைவமங்கையர் மகளிர் கல்லூரி மாணவர்களின்
வில்லுப்பாட்டு இசைநிகழ்ச்சி

DESIGNED & PRINTED BY UNIE ARTS (PRIVATE) LTD. COLOMBO 13. TEL: 011 233015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org